www.tamilarangam.net

# இலக்கு

"அடிமை நிலைக்கு நிவாரணம்
அடிமை விலங்கை உடைத்தெறிவதுதான்;

இருக்கின்ற விலங்குகளுக்குப் பதிலாக
இன்னொரு புதிய விலங்கை மாட்டிக்கொள்வதல்ல."

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின்
அரசியல் தத்துவார்த்த விமர்சன ஏடு

சுவடு – 7 ஆனி – புரட்டாதி 1985

தமிழத தேசிய ஆவணச சுவடிகள்

www.tamilarangam.net

**வெகுஜனத் தொடர்பு என்பது
வெடிகுண்டுகளைக் காட்டிலும்
வலிமையானது**

**வாசகர்களுக்கு**

இலக்கு சுவடு 7 வெளிவரக் காலதாமதமாகியமைக்கு வருந்துகின்றோம்.

இலக்கு தொடர்பான உங்கள் கருத்துக்களையும், விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

**- ஆசிரியர் குழு**

□

**அன்பளிப்பு: ரூபா 4.00**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கு

## தமிழ் மக்களின் பிரச்சினையை திம்பு பேச்சுவார்த்தை தீர்த்து வைக்குமா ?

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், பூட்டான் தலைநகர் திம்புவில் இந்திய அரசின் தலைமையில் இரண்டு கட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்துள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் முதற் கட்டமாக, சிறீலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதென இந்திய - இலங்கை அரசுகளினால் முடிவு செய்யப்பட்டு, இது தொடர்பான திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு, தமிழீழ விடுதலை இயக்கங்களிடம் ஒப்புதல் கையொப்பமும் பெறப்பட்டது. பொதுவாகவே, இது போன்ற திட்டங்களைத் தயாரிக்கும் போது விடுதலை இயக்கங்களும் இருந்து தயாரிப்பதே வழமையாகும். ஆனால், இங்கோ விடுதலை இயக்கங்களின்றி, இந்திய - இலங்கை அரசுகளினால் தயாரிக்கப்பட்டு விடுதலை இயக்கங்களிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தமிழ் மக்களில் இருந்தும், விடுதலைப் போராட்டத்தில் இருந்தும் அந்நியப்பட்டுப் போய் இந்தியாவில் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசின் உதவியினால், இப் பேச்சுவார்த்தையில் நுழைந்து தன்னையும் ஒரு போராட்ட சக்தியாகக் காட்டிக் கொண்டது.

விடுதலைப் போராட்ட வரலாறுகளில் போர்நிறுத்தமும், சமரசப் பேச்சுவார்த்தைகளும் ஒருமுறை மட்டுமல்ல, பலமுறை நிகழக் கூடியதே. விடுதலை இயக்கங்கள் போர் நிறுத்தத்தையும், பேச்சுவார்த்தையையும் தந்திரோபாய ரீதியாக - இரண்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும்.

1. போராட்டத்தில் ஈடுபடும் சக்திகளின் அகநிலை, புறநிலை சக்திகளிடையே உள்ள முரண்பாடுகளை சீர்செய்து நம்மைத் தயார்ப்படுத்தி போராட்டத்தை மேலும் முன்னேக்கி - வெற்றியை நோக்கி - கொண்டு செல்லவும். (அதாவது சிங்கள அரசின் ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்கவும், இராணுவ பலத்திற்கு ஈடு கொடுக்கவும் ஏற்றவகையில் எமது ஸ்தாபன உணர்வு மட்டங்களை உயர்த்தி போராட்ட சக்தியை அதிகரித்து, எம்மைத் தயார்படுத்திக் கொள்ள.)

2. எதிரியின் தன்மையை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அம்பலப் படுத்தவும்.

ஆனல், இப் பேச்சுவார்த்தையும், போர்நிறுத்தமும் தமிழீழ விடுதலை இயக்கங்களின் தேவையில் இருந்தோ, அல்லது தமிழீழ மக்களின் விருப்பில் இருந்தோ எழவில்லை. மாருக தென்னுசியப் பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலனில் இருந்தே (அமெரிக்க-இந்திய புதிய பொருளாதார உறவுகளும், இதனல் விளைந்த இலங்கை சார்ந்த அமெரிக்க-இந்திய நிலைப் பாடுகளும்) எழுந்துள்ளது.

இது எவ்வாறு இருப்பினும் இதை நாம் புரிந்து கொண்டு மேற்குறிப்பிட்ட காரணங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்காக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது சரியானதே. பேச்சுவார்த்தை மூலம் தமிழீழ மக்களின் பிரச்சினையை தீர்ப்பதாயின் பின்வரும் அடிப்படையிலேயே தீர்க்கப்பட முடியும்.

1. தமிழ் மக்கள் ஒரு தனித்தேசிய இனமாக வளர்ந்துள்ளதை அங்கீகரிக்க வேண்டும்

2. தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களின் ஒருமைப்பாட்டை அங்கீகரிக்க வேண்டும்.

3. தமிழ் தேசிய இனத்தின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

4. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் குடியுரிமையும், அடிப்படை ஜனநாயக உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்.

இன்று சிங்கள பேரினவாதத்தில் தனது இருப்பைக் கொண்டுள்ள ஜே.ஆரின் அரசு ஏற்கனவே வலியுறுத்திய, 'மாவட்ட சபை'க் கோரிக்கைகளையே திரும்பவும் திம்பு மாநாட்டின் முதலாவது கட்டப் பேச்சுவார்த்தையில் வைத்து பேச்சுவார்த்தையைக் குழப்பியது. போர் நிறுத்தம் நடந்துகொண்டு இருக்கும் போதே இனப்படுகொலைகளை இலங்கை அரசு செய்து இரண்டாவது கட்டப் பேச்சவார்த்தையையும் குழப்பியது.

ஒருபுறம் போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு மறுபுறம் வல்லரசு நாடுகளைச் சார்ந்து நின்று நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்துகொண்டும், தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் நடவடிக்கையைச் செய்து கொண்டும் இருக்கின்றது. அத்தோடு தன்னை மேலும் மேலும் இராணுவ மயமாக்கிக் கொண்டு வருகின்றது. இது தன் பாசிசத் தன்மைகளைக் கட்டிக் காப்பதன் மூலமே, தமிழ் மக்களின் மீது மேலும்மேலும் ஒடுக்குமுறையை அதிகரிப்பதன் மூலமே தன் இருப்பைப் பாதுகாத்துக் கொண்டு இருக்க முடியும்; இருக்கின்றது. எனவே தமிழீழ மக்கள் தனிநாடு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான தேவைகளும், காரணங்களும், அவசியமும் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறை ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்தபின் தான் தமிழ் மக்கள் தனிநாட்டுக் கோரிக்கையை வைத்துப் போராட ஆரம்பித்தார்கள். அதன்பின் மேலதிகமான ஒடுக்குமுறைகளும் இராணுவக்கெடுபிடிகளும் அதிகரித்தன. இப் போர்நிறுத்தம் மூலம்-இராணுவக் கெடுபிடிகளைத் தளர்த்துவதன் மூலம்-தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்ததாக இலங்கை அரசு காட்ட முனையலாம். இந்நேரத்தில் நாம் போராடப் புறப்பட்டதற்கான காரணங்களையும் நோக்கங்களையும், மறந்துவிடக் கூடாது. (இராணுவ ஒடுக்குமுறையை தளர்த்துவதால் மட்டும் எமது அடிப்படைப் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை.)

இவை இவ்வாறு இருந்தும் இந்திய அரசானது, இலங்கைத் தமிழர் பிரச்சினையை சமரசத்துக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றது. இந்திய அரசானது தமிழீழ விடுதலை இயக்கங்களுக்குப் பல உதவிகளைச் செய்துள்ள போதும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை இது வரைக்கும் அங்கீகரிக்கவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையை சமரசத்துக்கு கொண்டுவர இந்திய அரசு முயற்சிப்பதால், தன் முயற்சிக்கு தடையாக இருக்கிறார்கள் என கருதி அகதியாக வந்த சந்திரகாசனையும், TELOவைச் சேர்ந்த சத்தியேந்திரா மற்றும் LTTEஐச் சேர்ந்த பாலசிங்கம் ஆகியோரையும் நாடு கடத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் போராட்ட வரலாறுகளில் அயல்நாடுகளைப் பின் புலமாகப் பாவிப்பது சரியானதும், தவிர்க்க முடியாததும் கூட. ஆனால் ஒரு சில தவிர்ந்த ஏனைய விடுதலை இயக்கங்கள் தமது பெருமளவு சக்திகளை தமிழ் நாட்டிலேயே குவித்து வைத்துள்ளன.

நாம் எமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை வைத்து அதிலேயே பிரதானமாகத் தங்கி நின்று போராடாமல் அயல்நாடுகளில் முழுமையாகத் தங்கி நிற்போமாயின் அந் நாடுகளின் நலன்களிற்கு கட்டுப்பட்டுப் போக வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்பதை எமது முன்னைய இலக்கு இதழ்களிலேயே குறிப்பிட்டிருந்தோம். எமது விடுதலை இயக்கங்கள் தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளில் இருந்தும், மேற்கூறிய நாடுகடத்தல் சம்பவத்தில் இருந்தும் இதனை உணரமுடியும்.

இன்று பல்வேறு நாடுகளில் நிகழும் விடுதலைப் போராட்டங்கள் நெருக்கடிகளையும், சிக்கல்களையும், பின்னடைவுகளையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கான காரணம், அமெரிக்க - சோவியத் வல்லரசுகளுக்கிடையிலான ஆதிக்கப் போட்டியேயாகும். எமது விடுதலைப் போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டமுமாகும். இந்த வகையில் சோவியத் வல்லரசானது தமிழீழப் போராட்டத்தின் நண்பனாகத் தன்னைக் காட்டிக்கொண்டு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நுழையலாம். இதனையிட்டு எமது மக்களும் விடுதலை இயக்கங்களும், கவனமாக இருந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். முன்பு எரித்திரிய மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உதவி செய்து உற்ற நண்பனாகக் காட்டிக்கொண்ட சோவியத் யூனியன், தனக்கு சார்பான அரசு எத்தியோப்பியாவில் வந்த பின்னர், எரித்திரிய விடுதலை இயக்கங்களை கைவிட்டதுடன், எரித்திரிய மக்களை ஒடுக்குவதற்கென்றே பெருமளவு ஆயுதங்களை எத்தியோப்பிய அரசுக்கு வழங்குகின்றது.

ஆகவே இந்நிலையில், விடுதலை இயக்கங்கள் ஏகாதிபத்தியங்களதும், வல்லரசுகளதும் சதிச் செயல்களையும், மேலாதிக்கங்களையும் முறியடிக்க பொது வேலைத்திட்டங்களில் இணைந்து, எமது சொந்தப் பலத்தில் தங்கிநின்று, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

●

---

*வாழ்வு என்பது மனிதனின் மதிப்பிற்கரிய செல்வம். ஒரு மனிதன் ஒரு முறைதான் வாழமுடியும் என்பதால், அந்த வாழ்க்கையை சில்லறைத் தனமான, பயனற்ற, கோழைத்தனமான முறையில் வாழ்ந்தோமே என்ற ஏக்கம் மனதை வாட்டி வதைக்காத வகையில் மனிதன் வாழவேண்டும். வாழ்வின் இறுதியில் திரும்பிப் பார்க்கையில் என்னுடைய வாழ்நாள் முழுவதையும், பலம் - திறம் அனைத்தையும், மிகவும் உன்னதமான மிகவும் மகத்தான இலட்சியத்தை அடைவதற்கு, மனிதகுலத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்தேன் என்று பெருமிதத்துடன் கூறும்வகையில் வாழ வேண்டும்.*

--லெனின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியற் குறிப்புகள்

## 1. தமிழீழத்தின் கலாச்சார சீரழிவுகள்:

### மினி தியேட்டர்கள்:

தமிழ் நாட்டின் பத்திரிகைகள், சினிமா மற்றும் கலாச்சாரங்கள் எமது மக்களை சீரழித்ததில் கணிசமான பங்காற்றியதை யாரும் மறுக்க முடியாது. மக்கள் - குறிப்பாக இளைஞர்கள் - பிரச்சினைகளை மறந்து இச்-சீரழிவுக் கலாச்சாரங்களில் மூழ்கி ஒரு மாயையில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆளும் வர்க்கங்களும் சீரழிவுக் கலாச்சாரத்தின் ஊடுருவலிற்கு நன்ருக நாட்டைத் திறந்துவிட்டன. இது, மக்கள் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு ஆளும் வர்க்கத்திற்கெதிராகப் போராடாமல் திசை திருப்பிவிடுவதற்கான ஒரு நடவடிக்கையாகும். யூ. என். பி. அரசு பதவிக்கு வந்ததோடு கூடவே ஏகாதிபத்தியக் கலாச்சாரங்களும் நாட்டில் தாராளமாக நுழைந்தன. உல்லாசப் பயணத்துறை, சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கை என்பன இதற்கு வழிதிறந்துவிட்டன. இவை சிங்கள மக்களை பெரிதும் சீரழித்ததுடன் தமிழீழப் பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

கடந்த சில வருடங்களாக தமிழீழப் பகுதியில் வீடியோ மற்றும் சினிமாக்களின் ஆதிக்கம் வலுத்தது. அண்மைக் காலங்களில் யாழ்ப்பாண சினிமா திரையரங்குகளில் சினிமா காண்பிக்க முடியாத நிலை இருந்து வந்தது. இந் நிலையில் கொள்ளைலாபமீட்டிய சினிமா திரையரங்கு முதலாளிகள் பலரும் கவலை கொண்டனர். இதன்பின் சினிமா திரையரங்குகளுக்குப் பதில் 'மினி தியேட்டர்'கள் பல புதிதாக முளைக்கத் தொடங்கின. இன்று ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு மினி தியேட்டர் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களாக ஊருக்கு ஊர் வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டது. இவற்றில் ஆபாசமான ஆங்கிலப் படங்களும், Blue Film போன்றவையும் காண்பிக்கப்பட்டன. இன்று மினி தியேட்டர்களில் மிக மோசமான ஆங்கில ஆபாசப் படங்களும், Blue Filmகளும் தாராளமாகக் காண்பிக்கப்படுகின்றது. இது இளைஞர்களை பெரிதும் மினி தியேட்டர்களை நோக்கி படையெடுக்க வைத்துள்ளது. சில விடுதலை இயக்கத் தோழர்களை கூட Blue Filmகளை தேடி எடுத்துக் கொண்டு போய் பார்க்கும் அளவுக்கு நிலைமை சீரழிக்கப்பட்டுள்ளது. இது எமது மக்களை மிகவும் சீரழிப்பதுடன், இராணுவ ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் எம் மக்களை இச் சீரழிவு படங்களில் லயிப்பில் ஆழ்த்தி மக்களை போராடாமல் திசை திருப்பவும் செய்கின்றது.

### போதைவஸ்து கடத்தல்:

இன்று சர்வதேச ரீதியில் நடைபெறும் போதைவஸ்து கடத்தலில் தமிழ் இளைஞர்கள் பிரதான பாத்திரம் வகிக்கின்ருர்கள். சிங்கள அரசின் ஒடுக்குமுறை காரணமாக நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளுக்கு சென்றுள்ள பல இளைஞர்களும், விடுதலை இயக்கங்களில் இருந்து வெளியேறிய பல இளைஞர்களும் போதைவஸ்து கடத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில் ஈடுபட்டுள்ளார்கள். தமிழீழப் போராட்டம் ஆயுதப் போராட்டம் என்ற நிலைக்கு வளர்ச்சிபெற்று இனக்கலவரம் அடிக்கடி நிகழும் நிலைமை ஏற்பட்டபின் பல நாடுகளில் இலங்கைத் தமிழர்களை அகதிகளாக அனுமதிக்கும் நிலை ஏற்பட்டது. இதனுல் இளைஞர்கள் பெருமளவில் பிற நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இது பலருக்கும் போதைவஸ்து கடத்தலில் ஈடுபட வாய்ப்பாக அமைந்தது. இன்று தமிழ் இளைஞர்கள் பலரும் தமது சொந்த நாட்டின் விடுதலைக்காக தாம் போராடுவதன் தேவையை மறந்து வெளிநாடுகளுக்கு ஓடுகின்றுர்கள். அங்கு வேலைவாய்ப்பு இல்லாத பட்சத்தில் பலர் போதைவஸ்து கடத்தலில் ஈடுபடுகின்றுர்கள். தாமும் போதைவஸ்திற்கு அடிமையாகிப் போகின்றுர்கள். இத்தாலி, ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் போதைவஸ்து கடத்திய குற்றத்திற்காக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

இன்று இப்படி வெளிநாடுகளுக்கு ஓடும் இளைஞர்களில் எவரும் உண்மையான அரசியல் பிரச்சினை உடையவர்களோ அல்லது இலங்கை அரசினுல் தேடப்படுபவர்களோ அல்ல. போதைவஸ்து கடத்தும் இளைஞர்களில் பலர் இன்று விடுதலை இயக்கங்களுக்கு நிதி உதவி செய்கின்றனர். இந்த லாபமான தொழிலைப் பார்த்த சில விடுதலை இயக்கங்களும் ஆட்களை வைத்து போதைவஸ்து கடத்துவதில் ஈடுபட்டுள்ளன. இன்னேர் நாட்டின் மக்களை சீரழித்து பெறப்பட்ட பணத்தையா தமது நாட்டு விடுதலைக்கு இவ்வியக்கங்கள் பயன்படுத்தப் போகின்றன? இன்று தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் போதைவஸ்து வியாபாரம் தாராளமாக நடைபெறுகின்றது.

1983 ஜூலை கலவரத்தை தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு இலங்கை தமிழர்கள் வந்த பின்னர்தான் இந்தியாவில் போதைவஸ்தின் நடமாட்டம் (புழக்கம்) அதிகரித்துள்ளது என சென்னையில் இருந்து வெளியாகும் 'தினமணி' எனும் பத்திரிகை அண்மையில் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆபாச சினிமாக்கள், பத்திரிகைகள், போதைவஸ்து என்பன எம் மக்களையும் - இளைஞர்களையும் - இன்று மிக மோசமாகச் சீரழித்துக் கொண்டிருக்கிறன. உலக நாடுகளில் பலவற்றிலும் விடுதலைப் போராட்டங்களை சீரழிப்பதற்கு பிற்போக்கு சக்திகள் போதைவஸ்து, புளூ பிலிம் போன்றவற்றை தாராளமாக இறக்குமதி செய்வதைக் காணகூடியதாக உள்ளது. சீனப்புரட்சியின் போதும் பிற்போக்கு கோமிங்டாங் அரசு பெருந்தொகையில் அபினை இறக்குமதி செய்து போராட்டத்தை சீரழிக்க முயற்சி செய்தது. இதுபோன்ற செயல்கள் போராட்டத்தில் இருந்து மக்களை திசைதிருப்பும் செயலன்றி வேறல்ல. இச் செயல்களை இட்டு எம் மக்களும், இளைஞர்களும் எச்சரிக்கையாக இருப்பதுடன், இவற்றுக்கெதிராகப் போராடவும் வேண்டும்.

## 2. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்:

1985ம் ஆண்டு இளைஞர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் (N.Y.C.) காரியாலயங்கள் உள்ள இடங்களில் எல்லாம் விளம்பரப் பலகைகள் தூக்கப்படுகின்றன. ''1986ம் ஆண்டு இளைஞர் ஆண்டு'' என்ற விளம்பரப்பலகைகள் தூக்கப்படுகின்றன. பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன இளைஞர்கள் பற்றிய கட்டுரைகளை ஆர்வத்துடன் வெளியிடுகின்றன. தேசிய இளைஞர் சேவை மன்றங்களினூடாக பல விழாக்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இவ் விழாக்களுக்கு 'அரச பயங்கரவாதிகள்' அழைக்கப்படுகின்றனர். இச்சமூகஅமைப்பில் இளைஞர்கள் எப்படியெல்லாம் சமரசம் செய்து வாழலாம் என்பதையும், இளைஞர்கள் இந்த அரசுக்கெதிராக கிளர்ந்தெழாமல் 'எப்படி ஒழுக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீலர்களாக' வாழவேண்டும் என்பதையும் மிகவும் ஆழமாக இவ் விழாக்களில் விளங்க வைக்கப்படுகின்றது. 'அரச பயங்கரவாதிகளின்' உரைகள் வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி என்பவற்றிற்கூடாகப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை பயங்கரவாதம் மட்டுமே; இதை ஒழித்துக்கட்ட அனைவரும் ஒன்றுபடுவோம் என்ற 'அரச பயங்கரவாதிகளின்' பிரச்சாரம் தீவிரமடைந்து வருகின்றது.

கனடாவின் உதவியுடன் இயங்கும் இத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது, ஏகாதிபத்தியங்களின் மீது நம்பிக்கையை இளைஞர்கள் மத்தியில் வளர்ப்பதற்காகவும், இளைஞர்கள் ஏகாதிபத்தியச் சுரண்டலுக் கெதிராகவும், உள்நாட்டு ஆளும் வர்க்கங்களுக் கெதிராகவும் போராடாமல் இருக்க செய்வதற்காகத் திட்டமிட்டே நிறுவப்பட்டதாகும். எப்பொழுதுமே, பொதுவாக ஒடுக்குமுறை அதிகரிக்கும் பொழுது முதலில் கிளர்ந்தெழும் பிரிவினர் இளைஞர்களே. இவர்கள் போராட்டத்தில் முக்கியமானவர்களும் கூட. இளைஞர் சக்தியை திசை திருப்பிவிடுவதன் மூலம் புரட்சியை தடை செய்ய நிறுவப்பட்டதே இந்த தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றமாகும்.

இந்த நிறுவனமானது நிலச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமாகவும், இளைஞர் சக்தியை விளையாட்டு போன்ற துறைகளில் ஈடுபடுத்தி அவர்களின் புரட்சிகர உணர்வுகளை திசைதிருப்பி விடுவதனூடாகவும் இந் நாட்டில் புரட்சியை தடை செய்துவிடலாம் என்று நினைக்கின்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அண்மைக்கால நடவடிக்கைகளாவன:

1. *விளையாட்டு உபகரணங்களை இலவசமாக வழங்கல்.*

2. *வெளிநாடுகளுக்கு விளையாட்டு வீரர்களை அனுப்புதல்:-*

இவை இளைஞர்களை பிரச்சினைகளை யோசிக்க விடாமல் விளையாட்டின் பக்கம் கவனத்தைத் திருப்பும் நோக்கில் செய்யப்படுகின்றன. வெளிநாடு செல்ல முடியும் என்ற நம்பிக்கையில் 500 பேர் விளையாட்டில் ஈடுபட்டால் நான்கோ அல்லது ஐந்து பேர் மட்டுமே வெளிநாடு போகமுடியும். அண்மையில் கனடாவுக்கு அனுப்புவதற்கான நேர்முகப் பரீட்சை அனுராதபுரத்தில் நடைபெற்றது. ஒரு சிலர் போக முடிந்த போதும் இனவெறி அரசின் திட்டமிட்ட நடவடிக்கையால் அதுவும் முடியாமல் போயிற்று.

3. *சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லுதல்:-*

அண்மையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது பொருளாதாரச் சிக்கலிற்கும், பாசிஸ அரசின் நெருக்கடிக்கும் உள்ளாகி இருக்கும் தமிழ் சிங்கள இளைஞர்களை குளியாப்பிட்டிக்குச் சுற்றுலா அழைத்துச் சென்றது. அங்கு சென்ற தேசிய பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலி தமிழ் இளைஞர்களைத் தனியாகச் சந்தித்து, அவர்களின் பிரச்சினையைக் கேட்டறிந்து பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினான். அதாவது மூளைச்சலவை செய்தான். ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாஸா போன்றோரும் அங்கு சென்றிருந்தனர்.

4. *முகாம்கள் அமைத்து பயிற்சி வழங்கல்.*

5. *சீரழிவுக் கலாச்சாரத்தை ஊக்குவித்தலும், வெளிநாட்டு மோகத்தை ஏற்படுத்தி ஏகாதிபத்தியங்கள் மீது நம்பிக்கை ஏற்படுத்தலும்:-*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரச ஒடுக்குமுறைக்கெதிராக இளைஞர்கள் கிளர்ந்தெழாமல் இச் சிந்தனைகளில் மூழ்கடிப்பதன் மூலம், பிரச்சினைகளில் இருந்து கவனத்தை நதிசைதிருப்பும் நோக்கமே இதில் அடங்கியுள்ளது.

இவையே தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (N. Y. C.)இன் நடவடிக்கைகளாக உள்ளன.

## 3. 'தினை விதைத்தவன் தினையறுப்பான்!' 'வினை விதைத்தவன் வினையறுப்பான்!'

அண்மையில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களின் படுகொலை, தமிழீழத்தில் வன்முறை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதை புலப்படுத்துகின்றது.

தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறை அதிகரித்தபோது சில இளைஞர் இயக்கங்களால் தனிநாடு எனும் கோஷம் முன்வைக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோதோ அல்லது அதன்பின் சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டபோதோ போராடாத எம் மக்கள் 1970ம் ஆண்டில் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டபோது கிளர்ந்தெழுந்தனர். இதிலிருந்து தமிழ் மக்களின் அரசியலில் படித்த இளைஞர்களின் பாத்திரம் முக்கியமானதாக இருந்ததென்பது தெளிவாகின்றது.

இவ் இளைஞர்களில் இயல்பாகவே தன்னிச்சைப் போக்கு காணப்பட்டது. இவ் இளைஞர்களின் விடுதலை உணர்வை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த விரும்பிய அப்போதைய தமிழ் அரசியல் தலைமை தன்னை தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பிரகடனப்படுத்தி, தமது பாராளுமன்றத் தேவைகளுக்காக இளைஞர்களால் வைக்கப்பட்ட தமிழீழக் கோஷத்தை மிகத்தீவிரமாக மேடைகளில் முன்வைத்தனர். அன்று தமிழீழத்தை அங்கீகரிக்காதவர்கள், தமது அரசியலிற்கு தடையாக நின்றவர்கள் சகலரையும் கூட்டணியினர் துரோகிகளாகக் காட்டினர். எதுவிதமான திட்டங்களுமின்றி மேடைகளில் வெற்றுக் கோஷங்களை முழங்கி இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டினர். (1977 தேர்தலின் போது தமிழின துரோகிகள் இயற்கையாகச் சாகமாட்டார்கள் என மேடைகளில் முழங்கினர்.) இவ்வாறு உணர்ச்சியூட்டப்பட்ட இளைஞர்கள் உதிரியாக ஆயுதமேந்திய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் காட்டிக்கொடுப்போர், துரோகிகள் போன்றோரை அழிப்பதில் தொடங்கி பொலிஸ் அதிகாரிகளை அழித்தல், வங்கிக் கொள்ளைகள் போன்ற செயல்களினூடாகச் சென்று நகர்ப்புற கெரில்லா நடவடிக்கை என்ற கட்டம் வரை இவ் ஆயுதமேந்திய நடவடிக்கைகள் வளர்ச்சி பெற்றன. இதன்மூலம், இதுவரை காலமும் பாராளுமன்றத்திற்குள் முடங்கிப் போயிருந்த தமிழ் மக்களின் போராட்டம் ஆயுதப்போராட்டம் என்ற நிலைக்கு வளர்ந்து மாற்றம் பெற்றது. இதே வேளை தீவிர முழக்கங்களை முன்வைத்துக் கொண்டு கூட்டணியினர் இலங்கை அரசின் சலுகைகளை தமது சொந்தலாப நோக்கிற்காகப் பயன்படுத்தினர்.

இதே போல் கூட்டணியினர் அல்லாத அரசின் சலுகைகளைப் பயன்படுத்திய அரசியல்வாதிகள் பலர் துரோகிகளாகக் காட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

[காட்டிக்கொடுப்போர், மோசமாகத் துரோகமிழைப்போர் தவிர மாற்றுக்கருத்துள்ளோரை அழிப்பதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை ஆரோக்கியமான பாதையில் முன்னெடுக்க முடியாதென்பதை பல முறை நாம் சுட்டிக்காட்டி வருகின்றோம்.] தம்மை விமர்சித்த சில இளைஞர் இயக்கங்களைக் கூட சிங்கள இடதுசாரிகளின் ஏஜண்டுகள் என தூற்றி பிரச்சாரம் செய்தனர். இது போன்ற பல்வேறு சந்தர்ப்பவாத நடவடிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைகளை மேற்கொண்டு இறுதியில் 1983 ஜூலைக் கலவரத்திற்குப் பின் இந்தியாவில் (தமிழ் நாட்டில்) தஞ்சம் புகுந்தனர். நாட்டில் இளைஞர்கள் போராட, தாமே போராட்டத்தின் வழிகாட்டிகளென சர்வதேச ரீதியில் இக் கூட்டணியினர் பிரச்சாரப்படுத்தினர்; வெளிக்காட்டினர். மக்களில் இருந்தும், போராட்டங்களில் இருந்தும் அந்நியப்பட்டுப் போயிருந்த இக் கூட்டணியினருக்கு அண்மையில் நடந்த திம்பு பேச்சுவார்த்தை புத்துயிர் அளித்தது. இந்த திம்பு பேச்சுவார்த்தை சிக்கலிற்குச் சென்றுள்ள நிலையிலே இப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமை கோரப்படாத படுகொலைகள் நடந்துள்ளன.

கூட்டணியினரின் தவறான அரசியல் இன்று இதுபோன்ற ஒரு தவறான நடவடிக்கைக்கு இளைஞர்களை இட்டுச் சென்றுள்ளது. இவர்களால் வளர்க்கப்பட்ட, உணர்ச்சியூட்டப்பட்ட இளைஞர்களே இவர்களுக்கெதிராக துப்பாக்கியைத் தூக்கியுள்ளார்கள்.

திம்பு பேச்சுவார்த்தையின் மூலம் மீண்டும் தலைமைப் பாத்திரத்தைப் பிடிக்கலாம் என்று முயற்சி செய்த அமிர்தலிங்கத்திற்கும் அவர் சார்ந்த கூட்டணியினருக்கும் எச்சரிக்கையாகவும் இப் படுகொலைகள் அமைந்துள்ளன.

இன்று எமது பிரதான எதிரியான சிங்கள தரகு முதலாளித்துவ பாசிஸ அரசுக்கெதிராக ஐக்கியப்படக் கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்திப் போராடுவதே இன்றைய தேவையாகும். இதனைவிட்டு தேவையற்ற பிளவுகளையும், மோதல்களையும், கொலைகளையும் நிகழ்த்துவது எமது மக்களின் சக்தியை பிளவுபடுத்தும்; மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும்; போராட்டத்தைப் பலவீனப்படுத்தும். இதனையே எதிரியும் விரும்புகின்றான். இது எதிரிக்குச் சாதகமான அம்சமாகும் கூட.

போராட்ட வரலாறுகளில் தொடர்ந்து துரோகம் இழைப்பவர்களை அம்பலப்படுத்தி மக்கள்முன் தண்டனை வழங்குவது தவிர்க்க முடியாதது. மக்களுக்கு எதிரான அரசியல் கருத்துக்களை அம்பலப்படுத்தி அதன் நோக்கத்தைமக்களுக்குப் புரியவைப்பதன் மூலம் மட்டுமே சரியான அரசியல் பாதையில் போராட்டத்தை முன்னடுக்க முடியும்.

## 4. விடுதலை இயக்கங்களின் அடாவடித்தனம்:

இன்று தமிழீழப் பிரதேசத்தில் விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களின் அடாவடித்தனம் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் இருக்கின்றது.

ஆரம்ப காலங்களில் துரோகிகள், காட்டிக் கொடுப்போர் போன்றோரை அழிப்பதில் தொடங்கி, இன்று சமூக விரோதிகள், உளவாளிகள் என உறுதிப்படுத்தப்படாத, உரிமை கோரப்படாத பல கொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சமூகவிரோதிகள் என்போர் யார்? இவர்களின் உருவாக்கம் எப்படி? இவர்களுக்கு மரண தண்டனை தான் சரியானதா? இதன் மூலம் சமூக விரோதச் செயல்களை நிறுத்திவிடமுடியுமா? என்றெல்லாம் இந்த செயல்களில் ஈடுபடுவோர் சிந்திப்பதில்லை. (சமூக விரோதிகள் ஒழிப்பு எனும் விடயம் பற்றிய ஆய்வுக் கட்டுரையை இலக்கு இதழ் 4இல் பார்க்கவும்.) உளவாளிகள் என சுட்டுக் கொல்லப்படுபவர்கள் உண்மையான நிரூபனத்தின் பின்தான் சுட்டுக் கொல்லப்படுகின்றனரா என்றால் இதன் விடை அச்சம் தரும் வண்ணமே இருக்கின்றது. இன்று சமூக விரோதிகள், உளவாளிகள் எனக் கொலை செய்யப்பட்டோரில் மனநோயாளிகள், விடுதலை இயக்கங்களை விமர்சிப்பவர்கள், மாறுபட்ட கருத்துடையவர்கள், இயக்கத் தோழர்களின் தனிப்பட்ட எதிரிகள், சந்தேகத்தின் பேரில் கைது செய்து சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு பின் விட்டால் இயக்கத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெயர் கெட்டுப் போய்விடும் என கொலை செய்யப்பட்டோர் எனப் பலர் அடங்குவர்.

மேலும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ருேம் எனக் கூறிக் கொண்டு மனம் போன போக்கில் குடும்பப் பிரச்சினை, காதல் பிரச்சினை, காணிச் சண்டை, வேலிப் பிரச்சினை என்பவற்றிற் கெல்லாம் தீர்ப்பு வழங்கித் தண்டனையும் வழங்குகின்ருர்கள். இத் தண்டனைகளும் மனிதாபிமானமற்ற முறையிலேயே நடைபெறுகின்றது. இதில் கூட இயக்கத் தோழர்கள் நடுநிலையாக இருந்து பார்ப்பதிலும் பார்க்க, இயக்கத் தோழரின் நண்பன், உறவினன், வேண்டியவர் என்று சார்பாகவே நீதி வழங்குகின்ருர்கள். மக்களுடைய நாளாந்த நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாயின் மக்களுக்குரிய அமைப்புகள், ஸ்தாபனங்கள் மூலமே செய்யப்பட வேண்டும். இவ்வாறில்லாமல் விடுதலைக்காகப் போராடும் விடுதலை இயக்கங்கள் தன்னிச்சைப் போக்கில் நடந்து கொள்வது மிகவும் வேதனை தருவதாகும்.

இவை தவிர, பொது மக்களிடம் உணவுப் பார்சல்கள், தங்க நகைகள் என்பன கூட சில சமயங்களில் மிரட்டிப் பெறப்படுகின்றன. அவசியமற்ற விடயங்களுக்கெல்லாம் துப்பாக்கி முனையில் வாகனம் கடத்தப்படுகின்றது. ஒரு விடுதலை இயக்கமானது தனது தேவைகளை மக்களிடமே பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். ஆனுல் இது பொது மக்கள், தமது விடுதலை கருதி உணர்வுபூர்வமாக போராட்டத்திற்கு தலைமை தாங்கும் சக்திகளிற்கு செய்வதாகும். இவ்வாறில்லாமல் இயக்கங்களின் இது போன்ற நடவடிக்கைகளினுல் விடுதலை இயக்கங்களின் மீது மக்களுக்கு வெறுப்பையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தும். இதனுல் மக்களுடன் மக்களாக வாழ்ந்து மக்களுக்கு வழிகாட்ட வேண்டியவர்கள் மக்களில் இருந்து அந்நியப்பட்டுப் போகும் நிலை கூட ஏற்படலாம். இம் மக்கள் விரோதச் செயல்கள் தொடருமாயின் விடுதலை இயக்கங்களுக்கெதிராக மக்கள் திரும்புவதற்கு அதிக காலம் செல்லாது.

●●

"மேதைக்கு அறிகுறி சராசரி அறிவை விட
சற்று அதிகமான அறிவுடையதாகும்.
ஆனுல் மேம்பட்ட அறிவு என்பது ஒரு தனி மனிதனையோ
அல்லது ஒருசில மக்களையோ சார்ந்திருப்பது அல்ல;
இது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்கும்
ஒரு கட்சியைச் சார்ந்திருக்கிறது.
ஒரு சரியான அரசியல் வழியையும்,
மக்களின் ஒட்டுமொத்தமான அறிவையும் சார்ந்திருக்கிறது."

— மாவோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலை இயக்கங்களின் குழுவாதப் போக்கும் அதன் தாக்கங்களும்

கோஷ்டி வாதம்-குழு வாதம் - என்பது குட்டிப்பூர்சுவா சிந்தனைப் போக்கின் வெளிப்பாடேயாகும். எமது சமூகமானது சிறு உடமை முறையையும், குட்டிப்பூர்சுவா வர்க்கத்தையும் பெருமளவில் கொண்டது. இதன் விளைவாக கோஷ்டி வாதத்திற்கான அடிப்படையையும் எம் சமூகம் கொண்டுள்ளது. எனவே எமது சமூகச் சூழலில் (குட்டிப்பூர்சுவாக்களால் உருவாக்கப்பட்ட) விடுதலை இயக்கங்களிடையே கோஷ்டி வாதம் இருப்பது இயல்பானது. இக் குழு வாதமானது பல்வேறு வடிவில் இயக்கங்களிடையே தொடர்ந்து வெளிப்பட்டு வந்துள்ளது. கடந்த கால இயக்கங்களின் நடவடிக்கைகளை உற்றுநோக்குவோமாயின் இதனைத் தெளிவாகக் கண்டுகொள்ள முடியும்.

ஆரம்ப காலங்களில் சில தனிநபர்களின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே இயக்கங்கள் உருவாயின. இந்த இயக்கங்களிடையே ஆரம்பத்தில் தனித்தனி இயங்க வேண்டிய அளவுக்கு கொள்கை வேறுபாடுகள் பெரிய அளவில் இருக்கவில்லை. தனிநபர் போட்டி போன்ற குழுவாத அடிப்படையிலேயே வெவ்வேறு குழுக்களாக இவை செயற்பட ஆரம்பித்தன. ஆரம்ப காலங்களில் TELO, LTTE என்பனவும், EROS, EPRLF என்பனவும் இவ் அடிப்படையிலேயே வெவ்வேறு குழுக்களாக செயற்பட்டன. LTTEஉம், TELOஉம் துரோகிகள், காட்டிக்கொடுப்போர் ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளை ஆரம்ப காலங்களில் செய்யும்பொழுது பல நடவடிக்கைகள் ஏட்டிக்குப் போட்டியாகவே செய்யப்பட்டன. பின்னர் இந் நடவடிக்கைகள் பொலிஸ் அதிகாரிகள் ஒழிப்பு, அதன்பின் நகர்ப்புற கெரில்லா நடவடிக்கை என வளர்ச்சி பெற்ற பின்னரும் கூட இக் குழுவாதம் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

ஆரம்ப காலத்தில் இருந்தே ஒவ்வொரு குழுவும் மற்றக்குழுக்கள் மீது அவதூறு பரப்பல், ஒரு இயக்கம் செய்யவிருக்கும் நடவடிக்கைகளை குழப்பும் நோக்கில் திட்டமிட்டு வேறு நடவடிக்கைகளை செய்தல், ஒருவர் செய்ய இருக்கும் நடவடிக்கைகளை முண்டியடித்துக் கொண்டு தாம் செய்ய முனைதல் என பலவகையான குழுவாத நடவடிக்கைகள் இருந்ததைக் காணலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேறிய புதிய பாதைக் குழுவினர் தம்மை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமாகப் புனரமைத்துக்கொண்டனர். முன்பு புலிகளின் நடவடிக்கைகளை தனிநபர் பயங்கரவாதம் என்று விமர்சித்துவிட்டு, பின்னர் அதே நடவடிக்கைகளை தாம் செய்துவிட்டு, அதைப் புரட்சிகரமானதாகக் காட்டிக் கொண்டனர். அக் கட்டத்தில் பல நடவடிக்கைகள் ஏட்டிக்குப் போட்டியாகவும் செய்யப்பட்டன. ஒருவர் மீதொருவர் போட்டி, பொருமை, காழ்ப்புணர்ச்சி போன்றவற்றையும் கொண்டிருந்தனர். இதன் விளைவாக, ஒருவரின் நடவடிக்கைகளை மற்றவர் குழப்பல், அவதூறு பரப்பல் எனச் சென்று, ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்ளும் நிலை வரைக்கும் கூட சென்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று, ஒரு விடுதலை இயக்கம் செய்யும் சரியான இராணுவ நடவடிக்கைகளை தவறானதாக பிரச்சாரம் செய்தல், பின் இதே நடவடிக்கைகளை தாம் செய்தல் போன்ற சம்பவங்கள் சாதாரணமாகி விட்டன. இது தவிர தாம் செய்ய முடியாத போது மற்றவர்கள் செய்யும் நடவடிக்கைகளை பிழை என்பதும், தம்மால் செய்ய முடியும் போது அது போன்ற புரட்சிகர நடவடிக்கை வேறில்லை என சந்தர்ப்பவாதமாகப் பிரச்சாரம் செய்வதும் விடுதலை இயக்கங்களிடையே காணப்பட்டன.

1983 ஜூலை கலவரத்தின் பின்னரும் கூட இக் குழுவாதப் போக்கு தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. பல்வேறு இயக்கங்களதும், தனிநபர்களதும் கூட்டு நடவடிக்கையால் செய்யப்பட்ட மட்டக்களப்பு சிறையுடைப்பு சம்பவம் தனித்தனி தாமே செய்ததாக உரிமை கோரப்பட்டது. அச் சம்பவத்திற்குத் தலைமை தாங்கிய தளபதிகளென் தமது பெயர்களையும் பத்திரிகைகளில் பிரசுரித்துக் கொண்டனர். வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளிக்கும் போது கூட, மற்ற இயக்கங்களைப் பற்றிய தவறான தகவல்களைக் கொடுத்தனர். முதன்முதலாக PLOTஇன் யந்திரப்படகு கடலில் கடற்படையினரால் தாக்கப்பட்ட போது ஏனைய இயக்கங்கள் அனுதாபப்படுவதற்குப் பதில் எள்ளிநகையாடினர். பின்னர் எள்ளிநகையாடியோரின் படகுகள் தாக்கப்பட்டபோதும் மற்றவர்கள் கிண்டலாகப் பேசிக் கொண்டனர். இதனை இயக்கங்களின் இராணுவ நடவடிக்கைகள் தோல்வியுறும் போதும் காணக் கூடியதாக இருந்தது.

இன்று, சரியான அரசியல் மார்க்கம் முன்வைக்கப் படாததாலேயே பல குழுக்கள் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. புதிய இயக்கங்கள் தோன்றுவதையும், அதன் வளர்ச்சிகளையும் கண்டு பயம் காரணமாக, அக் குழுக்களைப் பற்றி அவதூறு பரப்பல், சமூக விரோதி எனக் கூறி கொலை செய்தல், இயக்கத்தோழர்களைக் கடத்தி சித்திரவதை செய்தல் போன்ற நடவடிக்கைகள் செய்யப்படுகின்றன. இது போன்ற நடவடிக்கைகள் தமிழீழத்தில் மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும் செய்யப்படுகின்றன. ஏன் நூற்றியெட்டு சின்ன இயக்கங்கள்? ஏதாவது ஒரு பெரிய இயக்கத்துடன் இணைவது தானே என்பது பல குழுக்களின் இன்றைய வாதமாக உள்ளது. வரலாற்றில் பெரியவை சிறியவையாவதும், சிறியவை பெரியவையாவதும் நடக்கக்கூடிய விடயங்களே. எது சரி, எது பிழை என்பதைத் தீர்மானிக்கப் போகிறவர்கள் மக்களே. மக்கள் சக்தியில் நம்பிக்கை இல்லாதவர்களின் கருத்தின் வெளிப்பாடே இந்த வாதமாகும். இது முழுமையான குறுங்குழுவாதத்தின் வெளிப்பாடேயாகும்.

இன்று தமிழீழப் போராட்டம் இக்கட்டான நிலையை அடைந்தும் கூட விடுதலை இயக்கங்கள் ஐக்கியப்பட்டு போராடாமல் இருக்கின்றன. இதற்கு காரணம் தமது தலைமை இல்லாமல் போய்விடுமோ என்ற பயம் போன்ற குழுவாதக் கண்ணோட்டமே. இந்தக் குழுவாதப் போக்கிற்கு பின்வரும் காரணங்களைக் கூறமுடியும்.

1. நீண்டகாலக் கண்ணோட்டம் இன்மை.
2. மக்கள் நலனைவிட தமது குழு நலனை முதன்மைப் படுத்தல்.
3. போட்டி, பொறுமை, காழ்ப்புணர்ச்சி.
4. பிற்போக்கு சக்திகளின் ஊடுருவல்.

இந்தக் குட்டிப்பூர்சுவாச் சிந்தனையான குழுவாதத்தை முறியடித்தால் தான் விடுதலைப் போராட்டத்தை சரியான வழியில் முன்னெடுக்க முடியும்.

●●●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனக்காக
# சில வழிகாட்டு நெறிமுறைகள்

சூ என் லாய்

1. சிரத்தையுடன் படி. சாராம்சத்தைப் புரிந்து கொள். பல விஷயங்களைப் பற்றி மேலெழுந்தவாரியாகத் தெரிந்துகொள்ள முயல்வதை விட ஏதாவதொரு விஷயத்தில் முழுக்கவனத்தையும் முனைப்பாகச் செலுத்து.

2. கடுமையாக உழை. திட்டமிடு; கவனத்தை ஒருமுகப்படுத்து; ஒரு வழிமுறையைத் தேர்ந்து கொள்.

3. வேலையுடன் படிப்பையும் இணை; காலம், இடம் நிலைமைகட்கு ஏற்றபடி அவற்றிடையே ஒரு சமநிலை நிலவும்படி பார்த்துக்கொள்; செய்த வேலையைப் பரிசீலனை செய்யவும், அனுபவத்தை முறைப்படுத்தவும் தவறாதே; புதியன கண்டுபிடி; புதியன படை.

4. கொள்கை அடிப்படையில் மற்றவர்களிடத்திலும், தன்னிடத்திலும் உள்ள தவறான சித்தாந்தங்களை உறுதியாக எதிர்த்துப் போராடு.

5. முடிந்தமட்டும் ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்து; உன் பலவீனங்களிலிருந்து விடுபட திட்டவட்டமாகச் செயற்படு.

6. மக்களிடமிருந்து அந்நியப்பட்டுச் செல்லாதே; அவர்களிடமிருந்து கற்றுக் கொள்; அவர்களுக்கு உதவு; கூட்டு வாழ்க்கை வாழ்; உன் சுற்றிலும் உள்ள மக்களின் கவலைகளை விசாரி; அவர்களுடைய பிரச்சினைகளை ஆராய்க; கட்டுப்பாட்டு விதிகளுக்குக் கீழ்ப்படி.

7. உடல் நலத்தைப் பேணிக் காக்க, ஒழுங்கான வாழ்க்கை வாழ முயல்க. தன்-வளர்ச்சிக்கான அடித்தளம் இது என்று உணர்.

(சோங்கிங்கிலுள்ள ஹோங்கியானில் தவறு திருத்து மியக்கத்தின் பொழுது 1943 மார்ச் 18 அன்று எழுதிய குறிப்பு.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பு பற்றிய மார்க்சிய - லெனினிய ஆய்வுரைகள்

மார்க்சிய - லெனினியம், வர்க்கப் போராட்டம் மற்றும் அரசு பற்றிய தத்துவத்துடன் ஒருங்கிணைந்த பிரச்சினையாக பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ (**Military**) அமைப்பு பற்றிய பிரச்சினையை ஆராய்கிறது.

புராதன பொதுவுடமை சமுதாயத்தின் அழிவிற்குப் பின் சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபடுகின்றது. சமுதாயத்தின் வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறுகின்றது. சமுதாயம் நாடுகள்ாக அமையப் பெற்றவுடன் நாடுகளை ஒடுக்குவதும் அடிமைப்படுத்துவதும் தொடங்கியது. இப்போது வர்க்கப் போராட்டங்கள் தேச விடுதலைப் போராட்டங்களாக மாறின. ஆண்டான்களும் அடிமைகளும், பண்ணையார்களும் கூலி விவசாயிகளும், நாடுகளை அடிமைப்படுத்துபவர்களும் அடிமைப்பட்டவர்களும், ஒன்றுக்கொன்று பகைமை கொண்ட சமுதாயப் பிரிவுகளும் பல்வேறு வடிவமான போராட்டங்களைச் சந்தித்தன. அவை பின்னர் ஆயுத மோதல்களாகவும், போராகவும் பரிணமித்தன. பன்னெடுங்காலமாக வர்க்க சமுதாயத்தில் எண்ணற்ற போர்கள் நடந்துள்ளன. கடந்த ஐயாயிரம் ஆண்டுகளில் ஏறத்தாழ 10,000 போர்கள் நடந்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

போர் நடத்துவதற்கு வேண்டிய மிக முக்கியமான கருவி சேனை(**Army**)யாகும். சமுதாயம் பகை வர்க்கங்களாகப் பிளவுபட்டவுடன் அரசு தோன்றுகின்றது. சேனை என்பது அரசின் சிறப்பான கருவியாகும்; ஒரு குறிப்பிட்ட வர்க்கம் தனது அரசியல் மார்க்கத்தை ஆயுதமேந்திய வன்முறை மூலமாக பிரயோகிப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவியாகும்.

அரசின் வர்க்கத் தன்மை, சேனையின் சமுதாயத் தன்மையையும் அதன் செயல்பாடுகளையும் தீர்மானிக்கிறது. சுரண்டுகிற அரசுகளின் சேனைகள் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்: சுரண்டப்படுகின்ற உள்நாட்டைப் பொறுத்தவரை, பிற வர்க்கங்களைக் கீழ்ப்படுத்தி வைக்கும் ஆளும் வர்க்கங்களின் கட்டளைகளுக்கு அவை அடிபணிய நிர்ப்பந்திக்கும்; வெளி விவகாரங்களைப் பொறுத்தவரை, மற்றைய நாடுகளைப் பிடிக்கக் கூடியதாகவும், வெளியார் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ளக் கூடியதாகவும்இருக்கும்.

சுரண்டும் அரசுகளில் மூன்று விதமான அரசுகள் வரலாற்றில் தோன்றியுள்ளன. இந்த அரசுகளுக்குப் பொருத்தமான மூன்று வித சேனைகளும் தோன்றியிருக்கின்றன. அடிமைச் சமுதாய அரசின் சேனை, நிலப்பிரபுத்துவ அரசின் சேனை, முதலாளிய அரசின் சேனை என்பன மூன்று விதமான சேனைகளாகும்.

வரலாற்றின் போக்கில் அச் சேனைகளுக்குப் பல்வேறு பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. அவற்றின் அமைப்பு வடிவங்களும் ஆட்களைச் சேர்க்கும் முறைகளும் பல்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப பல்வேறு விதமாக இருந்திருக்கின்றன. ஆனுல் அவற்றின் இயல்பு மட்டும் ஒன்றேயாகும்; அதாவது சுரண்டும் வர்க்க அரசின் சேனையானது ஆளும் வர்க்கத்தின் கருவியாகச் செயல்பட்டு மற்றைய வர்க்கங்களை ஒடுக்குவதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றைய நாடுகளைக் கொள்ளையடிப்பதும், அடிமைப்படுத்துவதுமாகும். இருந்த போதிலும் சுரண்டுவோரின் கீழ் ஒடுக்குவோரின் சேனைகள் மட்டுமே இருந்ததென்பதில்லை. ஆயுதந் தாங்கிய ஒடுக்குமுறையை எதிர்த்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும் தங்களுடைய புரட்சிப் படையை தங்களுடைய புரட்சிகரப் போராட்டங்களுக்காக கட்டியிருக்கின்றன. ரோம் நாட்டில் ஸ்பாட்டகஸ் தலைமையில் அடிமைகள் ஆயிரக்கணக்கில், படை அமைத்து அடிமைப்படுத்தும் அரசை எதிர்த்துப் போராடினார்கள். மார்க்ஸ், ஸ்பாட்டகஸை ''தொன்மைக்கால வரலாற்றில் காணப்படும் மிகச் சிறந்த மனிதன்; போர்த் தளபதி; சிறந்த பண்பாளன்; தொன்மைக் காலப் பாட்டாளி வர்க்கத்தின் மிகச்சிறந்த பிரதிநிதி'' என்று பாராட்டியுள்ளார்.

நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தில் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் எழுச்சிகளின் போதும், விவசாயப் போரின் போதும், விடுதலைப் போரின் போதும் பல்வேறு நாடுகளில் விவசாயிகளின் படைகள் மிகப் பெரிய அளவிலும், மிகச் சிறந்த தாக்கும் திறனோடும் தோன்றியிருக்கின்றன. நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து முதலாளியப் புரட்சி தோன்றி முதலாளியம் உருவாகும் காலத்திலும் விவசாயிகளின் படைகளும், தொழிலாளர்களின் படைகளும் முதலாளிகளின் தலைமையில் தோன்றியிருக்கின்றன.

இருந்த போதிலும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் ஆயுதப் படைகள் மிகச் சிறந்த வெற்றிகளை ஒரு சில போது ஈட்டியிருந்த போதிலும் அவற்றின் வரலாற்று ரீதியான வரம்புகளாலும், சரியான அமைப்பு, அரசியல், இராணுவ மார்க்கம் இன்மையினாலும் இறுதியில் எதிரியால் நசுக்கப்பட்டிருக்கின்றன; தங்கள் கூட்டாளிகளால் காட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

இத் துரோகம் முதலாளியப் புரட்சிக் காலகட்டத்தில் தான் மிக முழுமையாகத் தன்னை வெளிப்படுத்தியுள்ளது. ஏங்கெல்ஸ் சுட்டிக் காட்டியது போல, பிரான்சில் உள்ள தொழிலாளர்கள் ஒவ்வொரு புரட்சியின் போதும் ஆயுதபாணிகளாகியிருக்கிறார்கள். அதனால் ''அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் முதலாளிகள் செய்த முதல் காரியம் தொழிலாளர்களை நிராயுதபாணிகளாக்குவது தான். ஒவ்வொரு புரட்சியும் தொழிலாளர்களின் இரத்தத்தால் வெற்றியடைகின்றது. வெற்றியடைந்ததுடன் மற்றொரு போராட்டம் வெடிக்கிறது. இது தொழிலாளர்களின் தோல்வியில் போய் முடிகிறது.''

மார்க்சியமும் பாட்டாளி வர்க்கக் கட்சிகளும் தோன்றியவுடன் வரலாற்றில் புதிய பரிமாணம் தோன்றுகின்றது. அதற்கு முன் 'தன்னெழுச்சி'யாகப் போராட்டங்கள் நடந்த நிலை மாறி ''உணர்வுபூர்வமான'' சரியான பாதையில் போராட்டங்கள் உருவாக்கப் படுகின்றன. இது பாட்டாளிய புரட்சிகரப் போராட்டத்தில் ஒரு புதிய பாய்ச்சலை உருவாக்குகிறது. அந்த அடிப்படையில் தான் சுரண்டப்படும் மக்களின் இராணுவ அமைப்பு என்ற பிரச்சினை பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ விஞ்ஞானத்தில் தீர்க்கப்படுகிறது. பாட்டாளி வர்க்கத்திற்கான அரசியல் கட்சிகள்-கம்யூனிஸ்ட் கட்சிகள்-அரசியல் உலகில் தோன்றி அவை பல்வேறு நாடுகளில் புரட்சிக்குத் தலைமை கொடுக்கத் தொடங்கின. அதன் விளைவாக, வெகுஜன ஆதரவு பெற்றதும், புரட்சிகரத் தன்மை வாய்ந்ததுமான ஆயுதமேந்திய அமைப்புகள் தோன்றின. அவை பாட்டாளி வர்க்கப் புரட்சி, முதலாளியப் புரட்சி, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடக்கும் மக்கள் ஜனநாயகப் புரட்சி அல்லது தேசிய விடுதலைப் புரட்சிகள் போன்றவற்றில் தோன்றியவையாகும். குறிப்பாக ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கும் ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் தொடர்ச்சியாக நடந்த சோசலிசப் புரட்சிகளின் வெற்றிக்கும் பிறகு உலகிலேயே முதன்முறையாக புதுவிதமான ஆயுதப்படைகள் தோன்றின. இவை தான் மக்களின் உண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையான ஆயுதப்படைகளாகும். வரலாற்றிலேயே மிக முற்போக்கான அரசான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் படைகளாகும்.

**மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் ஆய்வுரைகள்**

முதலாளியத்துக்குச் சவக்குழி தோண்டி, வர்க்கங்களும் மனிதனை மனிதன் சுரண்டும் நிலையும் இல்லாத கம்யூனிச சமுதாயத்தைக் கட்டுவதுதான் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையென வரையறுத்துக் கூறிய மார்க்சும், ஏங்கெல்சும் பாட்டாளி வர்க்கம் தன்னை விடுதலை செய்வதற்குகந்த மிகச் சிறந்த வழியையும் சுட்டிக் காட்டினர். அதாவது, தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஏற்று, விவசாய வர்க்கத்துடன் நெருக்கமான கூட்டேற்படுத்திக் கொண்டு, முதலாளி வர்க்கத்தின் அரசியந்திரத்தை உடைத்து நொறுக்கப் புரட்சிகர வன்முறையைப் பயன்படுத்த வேண்டும்; பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை நிறுவ வேண்டும்; பாட்டாளிய ஆட்சியைப் பாதுகாக்கவும் கம்யூனிச நெறிகளின் அடிப்படையில் சமுதாயத்தை மாற்றியமைக்கவும் இவ்வரசை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும்.

**பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பானது,** முக்கியமாக, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தின் இந்த மாபெரும் இலட்சியத்திற்காகத் தான் உருவாக்கப்படுகிறது. அடிமைத்தளைகளை உடைத்தெறியவும் பழைய உலகைத் தூக்கியெறியவும் கிளர்ந்தெழுகின்ற பாட்டாளி வர்க்கமும், புரட்சிகர மக்களும், புரட்சி இயக்கத்தினூடே, தமது சொந்த இராணுவ அமைப்பைக் கட்டாயம் கட்டியாக வேண்டும். ஏனெனில் ஒரு பௌதீகச் சக்தியை மற்றொரு பௌதீகச் சக்தியினால் தான் வெல்ல முடியும்; முதலாளிகளின் ஆட்சியைத் தூக்கியெறிந்து பாட்டாளி வர்க்க ஆட்சியை நிறுவுதல் என்ற வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முடியும். ஆளும் வர்க்கமும் வரலாற்று அரங்கத்திலிருந்து தானாக வெளியேறச் சம்மதிக்காது. முடியாட்சி அரசுகளும் தமது கட்டுப்பாட்டின் கீழ் பெரியதொரு ஆயுதப் படைகளை வைத்துக் கொண்டுள்ளன. தமது நாட்டு மக்களை ஒடுக்கவும் உலகைக் கொள்ளையடிக்கவும் பயன்படுகின்ற ஒரு திறமையான கருவியாக அப்படையை அவை இடைவிடாது சீர்படுத்திக் கொண்டே இருக்கின்றன. பாட்டாளி வர்க்கத்தினதும், உழைக்கும் மக்களினதும் சுதந்திர உணர்வுகளை நசுக்கவும், அவர்களது புரட்சிப் போராட்டங்களை இரத்தத்தில் மூழ்கடிக்கவும் ஆளும் வர்க்கங்கள் தமது பிற்போக்கு இராணுவ யந்திரங்களைத் தான் எப்போதும் நம்பியுள்ளன. முதலாளியம் உதயமாகிக் கொண்டிருந்த போதே, முதலாளியம் கீழ்க்காணும் பண்பைக் கொண்டிருந்தது என ஏங்கெல்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்:- ''பாட்டாளி வர்க்கம் தனது சொந்த நலன்களுக்காகவும் சொந்தக் கோரிக்கைகளுக்காகவும் தனியொரு வர்க்கமாக நின்று முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராட துணியும் போது முதலாளி வர்க்கம் அதை எவ்வளவு கொடூரமாக ஒடுக்கும் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது.'' முதலாளியத்தின் வளர்ச்சிகளும் அதன் உள்முரண்பாடுகள் ஆழமடைதலும், முதலாளி வர்க்கத்தின் அரசு யந்திரத்தின் இராணுவ வெறிப் போக்குகள் அதிகரிப்பதற்கும், எதிர்ப்புரட்சி ஆயுதப்படைகள் விரிவடைவதற்கும் வழி கோலுகின்றன. ஏங்கெல்ஸ் எழுதினார்:- ''இராணுவம் அரசின் பிரதான செயல் நோக்கமாகி விட்டது; அதுவே இலட்சியம் என்றாகி விட்டது. இராணுவத்துக்குவேண்டிய படைவீரர்களை வழங்கி அவர்களுக்கு உணவளிப்பதற்கு மட்டுமே மக்கள் தேவைப்பட்டனர். இராணுவ வெறி ஐரோப்பாவில் மேலாதிக்கம் செலுத்தி அதை விழுங்கி வருகின்றது.''

இத்தகையதொரு சூழ்நிலை, முதலாளிய அரசின் ஆயுத ஒடுக்குமுறையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்க்கவும், அவர்களின் இராணுவ யந்திரத்தைத் தகர்த்து அவர்களது எதிர்ப்பை முறியடித்து வெற்றி பெற்று புரட்சிகர அதிகாரத்தைப் பாதுகாக்கவும், தமது சொந்த இராணுவ அமைப்புகளைக் கொண்டிருக்குமாறு பாட்டாளி வர்க்கத்தையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் நிர்ப்பந்திக்கின்றது.

முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிய பாட்டாளி வர்க்கம் நடாத்தும் போராட்டத்தில் இராணுவ அமைப்பு இன்றியமையாதது என்றால் எத்தகைய வடிவத்தில் அவ்வமைப்பு கட்டப்பட வேண்டும்?

இப்பிரச்சினையை மார்க்சிய - லெனினியத்தின் ஆசான்கள் முழுமையாகத் தீர்த்துள்ளனர். பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ விஞ்ஞானத்தை நிறுவியவர்கள் என்ற முறையில் மார்க்சும், ஏங்கெல்சும் தான் முதன் முதலில் **பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பு வடிவம் பற்றிய பிரச்சினைக்குக்** கீழ்க்காணும் புகழ்பெற்ற ஆய்வுரையினைக் (**Thesis**) கொண்டு ஒரு தத்துவார்த்த அடிப்படையை உருவாக்கினர்:- **"தொழிலாளி வர்க்கத்தை ஆயுதபாணியாக்குதல்; நிலையான சேனையை (Standing Army) அகற்றி அவ்விடத்தில் ஆயுதமேந்திய மக்களைக் கொணர்தல்...** தொழிலாளிகள் ஆயுதபாணியாக்கப்பட்டு அமைப்புக்குள்ளாக்கப்பட வேண்டும். பாட்டாளி வர்க்கம் முழுவதற்கும் துப்பாக்கிகள், கனத் துப்பாக்கிகள், பீரங்கிகள் மற்றும் ஆயுதங்களை வழங்கி அவர்களை ஆயுதபாணியாக்கும் திட்டம் உடன் நிறைவேற்றப்பட வேண்டும்... அவர்களை நிராயுதபாணிகளாக்குவதற்கான எந்தவொரு முயற்சியையும் முறியடிக்க வேண்டும். அவசியமானால் இதற்கு பலப் பிரயோகத்தையும் செய்யலாம்." பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்திற்கெதிராக 1848இல் நடத்திய முதல் பெரும் போராட்டத்தில் ஏற்பட்ட இரத்தக் களரிக்குப் பிறகு 1850இல் மார்க்சும், ஏங்கெல்சும் பாட்டாளி வர்க்கம் ஆயுதம் தாங்க வேண்டும் என்ற இந்த வேண்டுகோளை விடுத்தனர். வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகள் சிலவற்றில் எழுச்சிகளும் (**Insurrection**) உள்நாட்டுப் போர்களும் புரட்சியின் உடனடிக் கடமைகளாக இருந்த ஒரு சமயத்தில் பாட்டாளி வர்க்கத்தை ஆயுதபாணியாக்குதல் என்பது பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் செயல் திட்டத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது.

ஐரோப்பாவின் 18ம் நூற்றுண்டின் பிற்பகுதியினதும் 19ம் நூற்றுண்டின் முற்பகுதியினதும் வரலாறு, முதலாளியப் புரட்சியின் வரலாறுமாகும். அன்றிருந்த நிலைமைகளில், நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்களுக்கும் பிற்போக்கு முதலாளிகளுக்கும் எதிராக பாட்டாளி வர்க்கம் முதலாளிய ஜனநாயக கட்சிகளோடு அணிசேர வேண்டி இருந்தது; புரட்சி வெற்றி பெற்றதும், பல சமயங்களில் முதலாளியக் கட்சிகளை அதிகாரத்துக்குக் கொண்டு வரவும் வேண்டியிருந்திருக்கின்றது. அத்தகைய சூழ்நிலையில் நிலப்பிரபு வர்க்கத்தினதும், பிற்போக்கு முதலாளி வர்க்கத்தினதும் அரசு யந்திரத்தைத் தகர்ப்பதற்கும் எழுச்சியின் வெற்றியை உத்தரவாதம் செய்து கொள்வதற்கு மட்டுமின்றி, முதலாளிய ஜனநாயகச் சக்திகள் ஆட்சிக்கு வந்த பிறகு அவை தவிர்க்கவியலாதபடி மேற்கொள்ளும் துரோகத் திட்டங்களை முறியடிப்பதற்காகவும் பாட்டாளி வர்க்கம் ஆயுதபாணிகளாக்கப்படுவது இன்றியமையாதது என மார்க்சும், ஏங்கெல்சும் கருதினர்.

போராட்டத்தின் வெற்றியின் பலன்களை காப்பாற்றிக் கொள்ளவும், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் சுயேட்சைத் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளவும், அதை மேலும் வலிமைப்படுத்தவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியை மேலும் வளர்த்தெடுத்து முதலாளிய வர்க்கத்தை வீழ்த்தவும் பாட்டாளி வர்க்கம் ஆயுதபாணியாவது முக்கியமானது.

பாட்டாளி வர்க்கம் ஆயுதபாணியானால் அதற்கு அளவற்ற வலிமை வருவதாக மார்க்சும், ஏங்கெல்சும் நம்பினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1848இல் அதை அவர்கள் பாரிசில் கண்கூடாகக்கண்டார்கள். மார்க்ஸ் பின்வருமாறு எழுதுகிறார்:- "தலைவர்கள் இல்லாமல், ஒரு பொதுவான திட்டமின்றி, சாதனங்கள் அற்ற நிலையில், பெரும்பாலும் ஆயுதங்கள் கிட்டாமல் எப்படித் தொழிலாளர்கள் முன்னென்றும் கண்டிராத வீரத்தோடும், மதிநுட்பத்தோடும் அரசு சேனை, நடமாடும் காவற் படை, பாரிஸ் தேசிய காவற் படை மற்றும் மாகாணங்களில் இருந்து வெள்ளம் போல் திரண்டுவந்த தேசியக் காவற்படை ஆகியவற்றை ஐந்து நாட்கள் தடுத்து நிறுத்தினர் என்பது நன்கு தெரிந்ததே." ஏங்கெல்ஸ் எழுதுகிறார்:- "40,000 தொழிலாளர்களால் தங்களை விட நான்கு மடங்கு அதிக சக்தியை (**Force**) இந்த அளவிற்கு எதிர்க்க முடியுமானால், பாரிசின் அனைத்து தொழிலாளர்களும் கட்டுப்பாடுடன் ஒரே மனிதனாக ஒன்றிணைந்து செயற்பட்டால் இன்னும் எவ்வளவு சாதிக்க முடியும்."

மேற்கூறிய கருத்துக்களை மேலும் வளர்த்து, பாரிஸ் கம்யூனின் அனுபவங்களை ஆழமாக ஆராய்ந்து, 1871இல் மார்க்சும், ஏங்கெல்சும் கூறினார்கள்: பழைய சேனையைத் தகர்த்துக் கலைக்க வேண்டும்; அதனிடத்தில் புதிய சேனையை அமைக்க வேண்டும்; கிரம சேனை (**Regular Army**)க்குப் பதிலாக மக்களை ஆயுதபாணிகளாக்க வேண்டும். மார்க்ஸ் எழுதினார்:- "பழைய அரசாங்கத்தின் தலைமைப் பீடமாகவும் அதே நேரத்தில் சமூக ரீதியில் பாட்டாளி வர்க்கத்தின் கோட்டையாகவும் இருந்த பாரிஸ் நகரத்தால் பகைவர்களை எதிர்க்க முடிந்ததென்றால், அதற்குக் காரணம், பாரிஸ் நகரம் முற்றுகை இடப்பட்டிருந்ததன் விளைவாக அது சேனையை ஒழித்துக் கட்டிவிட்டு அதனிடத்தில் தேசிய காவற் படையை உருவாக்கிற்று. இக் காவற் படையில் இருந்தவர்களில் பெரும்பாலோர் உழைக்கும் மக்களாவர். இவ்வுண்மையே இனி நியதியாக்கப்படவிருந்தது."

முதலாளிய ஆட்சியில், உழைக்கும் மக்கள் மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள முதலாளி வர்க்கம் பயன்படுத்தும் முக்கிய கருவி நிலையான சேனை தான் என்பதை மார்க்சும், ஏங்கெல்சும் சுட்டிக் காட்டினர். நிலையான சேனையை ஒழித்துக் கட்டுதல் என்பது, முதலாளிய அதிகாரத்தின் பௌதீகக் கருவியை ஒழித்துக் கட்டுதல் என்று பொருள்; முதலாளிய எதிர்ப்பு அபாயத்தையும், எதிர்த் தாக்குதல் அபாயத்தையும் ஒழித்துக் கட்டுதல் என்பது பொருள். அதோடு கூட, பாட்டாளி வர்க்கம் புரட்சிகர மக்களை உறுதியாகச் சார்ந்து நின்று, புரட்சிகர மக்களையும் ஆயுதபாணியாக்குவதன் மூலம் தனது சொந்த இராணுவ அமைப்பை விரைவாகக் கட்டி அதை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். தனது எழுச்சியின் வெற்றியைப் பாதுகாத்து புரட்சியை வளர்த்தெடுக்கும் ஒரே ஆயுதப் படையாக தன்னையும் புரட்சிகர மக்களையும் கருத வேண்டும். பாரிஸ் கம்யூன் உலக பாட்டாளி வர்க்கத்திற்கு உயிர்நாடியான பாடத்தைப் போதித்துள்ளது. "எனவே பாரிஸ் கம்யூன் பிறப்பித்த முதல் ஆணை நிலையான சேனையை (**Standing Army**) ஒடுக்குதலும் அதற்குப் பதிலாக மக்களை ஆயுதபாணிகளாக்குவதுமாகும்." இந்த அனுபவத்தில் இருந்து மார்க்சும், ஏங்கெல்சும் மிக முக்கியமான கருத்துக்களை உருவாக்கியுள்ளனர்: பழைய அரசின் அதிகார வர்க்க, இராணுவ யந்திரங்களைத் தகர்த்தெறிந்து அதற்குப் பதிலாக பாட்டாளி வர்க்கத்தின் புதிய அரசு அமைப்பு வடிவத்தை உருவாக்குதல் தொழிலாளி வர்க்கத்தின் கடமையாகும். பாட்டாளி வர்க்க அரசை உருவாக்குதல் என்பதை மகத்தான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக மார்க்சும், ஏங்கெல்சும் கருதினர். அதனால் தான் தங்கள் கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு 1872இல் எழுதிய முன்னுரையில், அவர்கள் இவ்வறிக்கை முன்வைத்த செயல்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய மிக முக்கியத்துவம் வாய்ந்த திருத்தமாக இவ்விடயத்தை கருதினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஆயுதபாணியாக்கப்பட்ட மக்கள் என்பதை சோஷலிச அரசின் இராணுவ அமைப்பு வடிவம்** என ஏங்கெல்ஸ் கணித்தார். சோஷலிசத்தின் வெற்றி பற்றிய இக் கணிப்பானது மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோர் வகுத்திருந்த கோட்பாட்டில் (**Principle**) இருந்து தோன்றியது. சோஷலிசத்தின் வெற்றி வளர்ச்சியடைந்த எல்லா முதலாளிய நாடுகளிலுமோ அல்லது அவற்றின் பெரும்பாலானவற்றிலோ ஏககாலத்தில் மட்டுமே சாத்தியமாகும் என்பதுதான் அக் கோட்பாடு. மேலும், சோஷலிச அரசு, அதன் சோஷலிச இயல்பின் காரணமாக, எந்த ஒரு நாட்டின் மீதும் ஆக்கிரமிப்பைத் தொடுக்காது என்பதால் அதற்கு ஒரு நிலையான சேனை தேவையில்லை என்றும், உள்நாட்டுப் பாதுகாப்பை ஆயுதமேந்திய மக்களே உத்தரவாதம் செய்வர் என்றும் அவர்கள் கருதினர். ஏங்கெல்ஸ் தம் காலத்தில் நிலவிய சேனைகளின் நிலை, 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்த இராணுவக் கலை, தொழில் நுட்பங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தனது ஆய்வைச் செய்திருந்தார். அச் சமயத்தில் வளர்ச்சியடைந்திருந்த முதலாளிய நாடுகளில் பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகியவை மட்டுமே பெரும் இராணுவ அமைப்புகளைக் கொண்டிருந்தன. இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட பிற முதலாளிய நாடுகளோ அப்போது முக்கியமான ஆயுதப்படைகளை வைத்திருக்கவில்லை. எனவே வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகள் அனைத்திலுமோ அல்லது அவற்றில் பெரும்பாலானவற்றிலோ பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறுமேயானால், இதர அரசுகளில் உள்ள ஆயுதப் படைகள் மிகவும் வலுவானவையாக இரா என ஏங்கெல்ஸ் கருதினார். இத்தகைய நிலைமைகளின் அடிப்படையிலும், பாரிஸ் கம்யூன் அனுபவத்தின் அடிப்படையிலும் தன் கருத்துக்களை உருவாக்கிய ஏங்கெல்ஸ் சோஷலிசத்தின் கீழ் ஆயுதபாணியாக்கப்பட்டு, அமைப்புக்குட்படுத்தப்பட்டு, இராணுவப் பயிற்சி தரப்பட்ட மக்கள் சோஷலிச அரசைப் பாதுகாப்பதற்கான தற்காப்புப் போர்களில் ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடித்து விடுவர் என்று நம்பினார். இந்த ஆய்வின் அடிப்படையில் இருந்து தான், சோஷலிசப் புரட்சியின் போது, முதலாளியத்தின் நிலையான சேனைக்குப் பதிலாக ஆயுதமேந்திய மக்கள் வைக்கப்படுவர் என மார்க்சும், ஏங்கெல்சும் நம்பினர்.

பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதமேந்திய எழுச்சிகளிலும் சோஷலிச அரசின் இராணுவ அமைப்பிலும் மக்களை ஆயுதபாணியாக்குதல் என்ற பிரச்சினையை மட்டுமல்லாது **தேசியப் போர்களில்** மக்களை ஆயுதபாணியாக்குதல் என்ற பிரச்சினையையும் மார்க்சும், ஏங்கெல்சும் கையாண்டுள்ளனர். அவர்கள் நீதியான போர்கள் என்றும், ஆக்கிரமிப்புப் போர்கள் என்றும் பகுத்துப் பார்த்தனர். ஆக்கிரமிப்புக்குப் பலியான ஒடுக்கப்பட்ட மக்களின் போர்களை, விடுதலைப் போர்களை, தற்காப்புப் போர்களை அவர்கள் எப்போதும் ஆதரித்தனர். சமகால நிகழ்வுகளை ஏங்கெல்ஸ் கூர்மையாக ஆராய்ந்து, அவற்றின் அனுபவங்களைத் தொகுத்து ஒடுக்கப்படும் மக்கள், மக்கள் யுத்தமொன்றை நடத்தி ஆக்கிரமிப்பாளர்களின் தொழில்முறை இராணுவங்களைத் (**Professional Army**) தோற்கடிப்பதற்கான வழிமுறைகளைச் சுட்டிக்காட்டினார். போர் வரலாறு பற்றி ஏங்கெல்ஸ் எழுதிய பல கட்டுரைகளில் **நீதியான போர்களிலும், தற்காப்புப் போர்களிலும் ஆயுதமேந்திய மக்களின் செயல்திறமை பற்றியும், அவர்கள் வகித்த மகத்தான பங்கு பற்றியும்** குறிப்பிடுகின்றார். ஏங்கெல்சின் இக் கருத்து, ஒரு மக்கள் யுத்தத்தை நடத்துவதற்காக அவர் பரிந்துரைத்த புதிய முறையொன்றுடன் நெருக்கமான தொடர்புடையதாகும். ஏங்கெல்ஸ் எழுதினார்:- ''தங்களது சுதந்திரத்தை திரும்பப் பெறுவதற்காகப் போராடும் மக்கள், போரை நடத்துவதில் மரபு வழிப்பட்ட முறைகளோடு திருப்தியடைய மாட்டார்கள். வெகுஜன எழுச்சிகள், புரட்சிப் போர்கள், நாடெங்கினும் கெரில்லாத் தாக்குதல்கள் - சிறுபான்மை மக்கள் பெரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பான்மை மக்களைத் தோற்கடிப்பதற்கான வழி இது ஒன்று தான்; வலுக்குறைவான ஒரு சேனை, வலு கூடுதலானதும், மேலும் சிறப்பாக ஒழுங்கமைக்கப் பட்டதுமான மற்றொரு சேனையை எதிர்ப்பதற்கான வழி இது ஒன்று தான்.'' பரந்துபட்ட ஆயுதமேந்திய வெகுஜனங்களே இத்தகைய போர்களுக்கான அடிப்படைக் கூறுகளாகும்.

1793இல் பிரான்சும், 1807 - 1812இல் ஸ்பெயினும், நெப்போலியனுக்கெதிராக ரஷ்யாவும் (1812), அவுஸ்திரேலியாவுக்கெதிராக 1849இல் ஹங்கேரியும் நடத்திய எதிர்ப்புப் போர்களை (**Resistance Wars**) ஏங்கெல்ஸ் புகழ்ந்தார். இவை மக்கள் யுத்த முறைகள் பிரயோகிக்கப்பட்ட எதிர்ப்புப் போர்கள் என்றும், சிலவற்றில் நிலையான சேனைகளின் நடவடிக்கைகளுடன் ஆயுதமேந்திய மக்களின் போராட்ட நடவடிக்கைகள் இணைக்கப்பட்டன என்றும், இதன் காரணமாக, மிக வலிமையான ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடிக்க தேசத்தின் மாபெரும் சக்திகளின் திறமை முழுவதும் வெளியிடப்பட்டது என்றும் அவர் புகழ்கிறார்.

ஆஸ்திரியர்களுக்கு எதிராக தாம் நடத்திய தற்காப்புப்போரில், வட இத்தாலியைச் சேர்ந்த பியேட் மொன்சே (**Pied Montse**) அடைந்த தோல்விக்கான காரணங்களை ஆராய்கையில் ஏங்கெல்ஸ் சுட்டிக்காட்டினார்:- ''பியேட் மொன்சே செய்த பெருந்தவறு என்னவென்றால், அவர்கள் ஆஸ்திரியர்களை எதிர்க்க நிலையான சேனையை மட்டுமே பயன்படுத்தினர். மிகவும் மரபுவழிப்பட்ட, முதலாளியத் தன்மை வாய்ந்த, மிகவும் கிரமமான போர் நடத்தவே அவர்கள் விரும்பினர்.'' நோவாரா என்னுமிடத்தில் பியேட் மொன்சே அடைந்த தோல்வி பற்றி குறிப்பிடும் ஏங்கெல்ஸ் கூறுகிறார்:- ''இத் தோல்விக்குப் பிறகு, ஒரு உண்மையான புரட்சிப் போர் வெடித்திருக்குமேயானால், இத்தாலியச் சேனையில் எஞ்சியிருந்தவர்கள், ஒரு தேசந்தழுவிய பொது எழுச்சியை தாங்கள் துவங்கி வைப்பதாக உடனடியாகப் பிரகடனப் படுத்தியிருந்தால், சேனைகள் நடத்திய **மரபு வழிப் போர்** 1793இல் பிரெஞ்சுக்காரர்கள் நடத்தியது போன்ற **மக்கள் யுத்தமாக** மாற்றப் பட்டிருக்குமேயானால் புரட்சிகரப் போர் புரியூரின் அரசாங்கத்திற்கு துணிவிருந்திருக்குமேயானால், இத் தோல்விக்கு எதுவித முக்கியத்துவமும் இருந்திருக்காது.'' ஏங்கெல்ஸ் முடிவு கட்டியது போல இத்தாலியின் சுதந்திரம் பறி போகக் காரணம் ஆஸ்திரிய நாட்டு ஆயுதங்களின் வலிமையல்ல; மாறாக இத்தாலிய அரசாங்கத்தின் கோழைத்தனமேயாகும்.

1871ல் பிரான்சிற்கும் பிரஷ்யாவிற்கும் நடந்த போர் பற்றி எழுதுகையிலும் ஏங்கெல்ஸ் இதே முடிவுக்குத்தான் வருகின்றார். பிரெஞ்சுப் பகுதியின் ஆறில் ஒரு பகுதியை ஜேர்மனியர்கள் கைப்பற்றியிருந்தனர்; மெட்ஸ், பாரிஸ் ஆகிய நகரங்களில் இருந்த கோட்டைகள் இரண்டை முற்றுகையிட்டிருந்தனர். அப்படியிருந்தும், பிரெஞ்சுக்காரர்கள் இத் தோல்வியை வெற்றியாக மாற்றியிருக்க முடியும். அத்தகைய வாய்ப்புகள் பிரான்சுக்கு இருந்ததாக ஏங்கெல்ஸ் கருதினார். ஜேர்மனியப் படைகளில் மிகப் பெரும் பகுதி ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலேயே நிலை கொண்டிருக்க, எஞ்சியிருந்த ஆறில் ஐந்து பகுதிப் பிரதேசமெங்கிலும் பிரான்ஸ் ஆயுதமேந்திய குழுக்களை உருவாக்கி எதிரிக்குத் தொல்லை கொடுத்திருக்க முடியும்; தகவல் தொடர்புகளைத் துண்டித்து, தளங்களை அழித்து, துண்டிக்கப் பட்ட ஜேர்மன் படைப் பிரிவுகள் மீது தாக்குதல் தொடுத்து, ஜேர்மனியப் படைகள் கலைந்து செல்லுமாறும், மேலே குறிப்பிட்ட கோட்டைகளில் இருந்து பின்வாங்குமாறும் நிர்ப்பந்தம் செய்திருக்க முடியும். நிலைமையைச் சமாளிக்க மெட்ஸியில் இருந்து பாடென் வெளியேற முயற்சித்திருப்பான்; பாரிஸ் முற்றுகையோ 'கிலி' பிடித்தால் போலிருந்திருக்கும். ''1808இல் ஸ்பானியர்களுக்கு இருந்த அதே ஆழ்ந்த தேசப்பற்று பிரெஞ்சுக்காரர்களுக்கு இருந்திருக்குமேயா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஞல், ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு கிராமமும் கோட்டையாக மாற்றப் பட்டிருக்குமேயானல், ஒவ்வோரு விவசாயியும், ஒவ்வொரு குடிமகனும் போராளியாகியிருந்தால் ஜேர்மனியர்களின் கதி என்னவாகியிருக்கும்'' என ஏங்கெல்ஸ் வினவுகிருர்.

ஆயுதமேந்திய மக்களின் எழுச்சி பற்றியும், கிரமப்படி அமைந்திராத ஆயுதமேந்திய ஆசியர்கள் பற்றியும், மக்கள் யுத்தம் நடத்துவதில் அவர்கள் கையாளும் வகை வகையான முறைகள் பற்றியும் ஏங்கெல்ஸ் கூறுகிருர். ஐரோப்பிய ஆக்கிரமிப்புச்சேனைகள் அஞ்சி நடுங்கிய பகைவர்களாக அவர்கள் இருந்தது பற்றி கூறுகின்ருர். ''அவர்கள் (சீனர்கள்) ரொட்டியில் விஷம் கலக்கின்றனர்... சிறிதும் தயக்கமின்றி நிதானமாகச் செயற்படுகின்றனர்... ஆயுதங்களை மறைத்து வைத்துக் கொண்டு நீராவிப் படகுகளில் பயணம் செய்கின்றனர். பயணத்தின் போது படகோட்டிகளைப் படுகொலை செய்கின்றனர்... படகைக் கைப்பற்றுகின்றனர்... அந்நிய நாடுகளுக்கு வேலை தேடிச் செல்லும் அதே சீனக் கூலிகள் தான், அவர்களை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு கப்பலிலும் கலகம் செய்கின்றனர்; அதைக் கைப்பற்றப் போராடுகின்றனர். முடியாவிட்டால், சரணடையாது கப்பலை மூழ்கடித்து அவர்களும் கடலில் மூழ்கி விடுகின்றனர்; அல்லது அதற்கு நெருப்பு வைத்து தாங்களும் மடிந்து சாம்பலாகி விடுகின்றனர். சீனுவிற்கு வெளியிலும் கூட, சீனக்குடியேறிகள் திட்டமிட்டு, திடீரென பெரும் எழுச்சிகளை நடத்துகின்றனர். இத்தகைய போர் முறைகளைக் கையாளும் மக்களை எதிர்த்து ஒரு சேனை என்ன செய்ய முடியும்?''

பாட்டாளி வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களினதும் இராணுவ அமைப்பு வடிவம் பற்றி விஞ்ஞான ரீதியான கம்யூனிசத்தைத் தோற்றுவித்த ஆசான்களின் கருத்து இது தான்: தொழிலாளி வர்க்கத்தை ஆயுதபாணியாக்குதல்; மக்களை ஆயுதபாணியாக்குதல், புரட்சிகர மக்கள் திரளினரை (**Masses**) ஆயுதபாணியாக்குதல்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான எழுச்சி, சோஷலிச அரசைப் பாதுகாப்பதற்கான போர் ஆகியவற்றில் மட்டுமல்லாது, முதலாளிய ஆட்சியின் கீழிருப்பதும் ஆக்கிரமிப்புக்குப் பலியாகி இருப்பதுமான ஒடுக்கப்பட்ட நாடுகளினதும், மக்களினதும் விடுதலைப் போர்கள், தற்காப்புப் போர்கள் ஆகியவற்றிலும் கூட இராணுவ அமைப்பு பற்றிய பிரச்சினைகளுக்கான தத்துவார்த்த அடிப்படையை மார்க்சும் ஏங்கெல்சும் உருவாக்கிச் சென்றனர்.

**இது ஒரு மிக அடிப்படையான கருத்து** என்பது வெளிப்படை. பாட்டாளி வர்க்கத்தினதும், ஒடுக்கப்பட்ட மக்களினதும் இராணுவ அமைப்பைக் கட்டுதல் என்ற பிரச்சினைக்கு, வர்க்கங்கள், மக்கள் திரளினர், புரட்சிகர வன்முறை ஆகியன பற்றிய வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கண்ணேட்டத்தைப் பிரயோகிப்பதில் மார்க்சும், ஏங்கெல்சும் பெற்ற மகத்தான வெற்றியே இது. ஆயுதமேந்திய எழுச்சியையும், புரட்சிப் போரையும் நடத்தும் மக்கள் திரளின் தீர்க்கமான பாத்திரம் பற்றிய சரியான கணிப்பிற்கு இது ஒரு முன்மாதிரியாகும். இந்த ஆய்வுரையின் மதிப்பு பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும் தமது சொந்த அமைப்பை உருவாக்கிக் கொள்ள சரியான வழியையும், திசையையும் உலகிலேயே முதன்முறையாக அவர்களுக்கு காட்டுகிறது என்ற உண்மையில் தங்கியுள்ளது; இந்த அமைப்பு முற்றிலும் புதிய அமைப்பு; பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் மக்களுக்காகவும், தங்கள் வர்க்கத்திற்காகவும் நடத்தும் போராட்டத்தில் பிறந்த அமைப்பு.

சரியான புரட்சிகர மார்க்கத்துடன், தனது ஆயுதமேந்திய அமைப்பைக் கட்டி அதை வளர்த்தெடுக்க புரட்சிகர மக்கள் திரளையும், தொழிலாளர்களையும், விவசாயிகளையும் புரட்சிகரக் கட்சி உறுதியாகச் சார்ந்திருக்குமேயானல், வெல்லப்பட முடியாத ஆயுதப் படையை அக் கட்சியினல் உருவாக்க முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மார்க்சிய - லெனினிய 'இராணுவ விஞ்ஞானத்தில், ஆயுதப் படைகள் கட்டுவதற்கான தத்துவார்த்த அடிப்படையாக இருப்பது இக் கருத்தே.** இது, உலகில் உள்ள பாட்டாளி வர்க்கத்தினதும், எல்லா ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினதும் மிகச் சக்தி வாய்ந்த ஆயுதமாகும்; பழைய உலகைத் தூக்கியெறிந்து புதிய உலகைப் படைப்பதற்கான ஆற்றல்களை வழங்குவது இக் கருத்துத் தான்.

## 2. லெனினிய ஆய்வுரை

மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் இந்த ஆய்வுரைகளை லெனின் தலைமையில் இருந்த ரஷ்ய மார்க்சிஸ்டுகள், ஏகாதிபத்தியக் காலக்கட்டத்தில் சோஷலிசப் புரட்சியும், முதலாளிய ஜனநாயகப் புரட்சியும் நடத்தப்பட்டு வந்த புதிய வரலாற்று நிலைமைகளுக்குப் பிரயோகித்தனர்.

முதலாளியம் ஏகாதிபத்திய கட்டத்திற்குச் சென்று கொண்டிருந்த சமயத்தில், சோஷலிசம் எல்லா நாடுகளிலும் ஏக காலத்தில் வெற்றியடைய முடியாது, மாருக அது ஒரு நாட்டில் அல்லது ஒரு குறிப்பிட்ட சில நாடுகளில் முதலில் வெற்றியடையும் என்ற தனது புகழ் பெற்ற புதிய ஆய்வுரையை உருவாக்கினுர் லெனின். அதே சமயத்தில் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்குப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்க வேண்டியது பற்றியும் இப் புரட்சி பாட்டாளி வர்க்கப் புரட்சியாக மாற்றம் பெறுதல் குறித்தும் உருவாக்கப்பட்ட தத்துவத்துடன் (Theory) லெனினும், ரஷ்ய போல்ஷ்விக் கட்சியும், ரஷ்யாவின் முதலாளிய ஜனநாயகப் புரட்சி, சோஷலிசப் புரட்சி ஆகியவற்றிற்கான செயல்திட்டத்தை வகுத்தனர். புதிய வரலாற்றுச் சூழ்நிலைமைகளில் பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்பைக் கட்டுவதன் இன்றியமையாமையை லெனின் அடிக்கோடிட்டுக் காட்டினுர்.

''பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராக ஆயுதபாணியாக்கப்பட்டுள்ள ஒரு முதலாளிய வர்க்கம் இருப்பது நவீன முதலாளிய சமுதாயத்தின் மிகப் பெரும், அடிப்படையான, முக்கியமான உண்மையாகும்... நமது முழக்கம் கீழ்க்கண்டதாக இருக்க வேண்டும்: 'முதலாளி வர்க்கத்தைத் தோற்கடித்து, அதன் உடமைகளைக் கைப்பற்றி அதனை நிராயுதபாணியாக்க பாட்டாளி வர்க்கத்தை ஆயுதபாணியாக்குக.' ஒரு புரட்சிகர வர்க்கத்திற்குச் சாத்தியமான நடைமுறைத் தந்திரம் இது ஒன்றுதான்; இந்த நடைமுறைத் தந்திரம் முதலாளிய இராணுவத்தின் ஒட்டுமொத்தமான புறநிலை வளர்ச்சியின் காரணமாக தர்க்க ரீதியாக உருவாகின்றது. இந்த நடைமுறைத் தந்திரத்தை தீர்மானிப்பதும் இப்புறநிலை வளர்ச்சி தான்.''

20ம் நூற்றுண்டின் துவக்கத்தில் இருந்தும் 1905ம் ஆண்டு புரட்சி, மாபெரும் அக்டோபர் புரட்சி ஆகியவற்றுக்குத் தலைமை ஏற்கையிலும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் கோட்பாட்டைப் பிரயோகித்த லெனினும், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியும், நிலையான சேனையை அகற்றி அவற்றுக்குப் பதிலாக ஆயுதமேந்திய மக்களை, குடிமக்கள் படைகளை வைத்தல் என்ற கருத்தை முன் வைத்தனர். அது முதலாளிய ஜனநாயகப் புரட்சியினதும், சோஷலிசப் புரட்சியினதும் முக்கிய கடமைகளில் ஒன்ருக இருந்தது.

ரஷ்யாவிலும், உலகிலுள்ள பல நாடுகளிலும் உள்ள (முதலாளிய) நிலையான சேனை, வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடுவதற்காக அல்லாமல் உழைக்கும் மக்களை ஒடுக்குவதற்கும் வேறு நாட்டு மக்களை அடிமைப் படுத்துவதற்குமே முக்கியமாகப் பயன்படுகிறது என்பதை லெனின் சுட்டிக் காட்டினுர். லெனின் எழுதினுர்: ''எல்லா நாடுகளிலும் நிலையான சேனை என்பது பிற்போக்கின் ஆயுதமாகவும், தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக முதலாளிகள் நடத்தும் போராட்டத்தில் முதலாளியத்தின் சேவகர்களாகவும், மக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளின் சுதந்திரத்தைக் கழுவில் ஏற்றுபவைக ளாகவும் மாறியுள்ளது.''

இச்சேனை இயல்பிலேயே மக்களுக்கான தாக இருக்க முடியாது. அதை அழிப்பது தான் புரட்சியின் வெற்றிக்கான நிபந்தனை; பிற்போக்குச் சக்திகள் மீண்டும் ஆட்சிக்கு வரத் தீட்டும் திட்டங்கள் அனைத்திலிருந்தும் புரட்சியைக் காப்பாற்றவும், சேனைகளுக் கான பெருஞ்செலவைத் தவிர்க்கவும், அதை அழிப்பது இன்றியமையாதது. அச் சேனைக்குப் பதிலாக **மக்களை ஆயுதபாணி யாக்க வேண்டும்; முதன்மையாக விவசாயி களையும், தொழிலாளிகளையும் ஆயுதபாணி யாக்க வேண்டும்.** அன்று நிலவிய வரலாற்று நிலைமைகளில் லெனின் கூறினர்: ''இராணுவம் என்ற தனிச் சாதியை ஒழித்துக் கட்டிவிட்ட ஆயுதமேந் திய மக்கள், எல்லாப் படைவீரர்களையும் குடிமக்களாகவும், குடிமக்கள் அனைவரை யும் ஆயுதமேந்தக் கூடியவர்களாகவும் ஆக் கியுள்ளனர். இவர்கள் ரஷ்யாவின் சுதந் திரத்தைக் காக்கும் அரணாக இருப்பார்க ளேயானல் உலகில் உள்ள எந்த சக்தியா லும் சுதந்திர ரஷ்யாவை ஆக்கிரமிக்க முடி யாது..... மக்களின் குடிப்படைகளை (Militia) உருவாக்குவதென்பது நடை முறைச் சாத்தியமானது என்பதனையும், தற்காப்புப் போர், தாக்குதல் போர் ஆகிய இரண்டினதும் இராணுவக் கடமைகளையும் மக்கள் குடிப்படைகளால் சாதிக்க முடியும் என்பதையும் இராணுவ விஞ்ஞானம் சாதித் துக் காட்டியுள்ளது.''

லெனின் தலைமையின் கீழ் அக்டோபர் புரட்சிக்கு முன்பும், புரட்சியின் அரசியல் படையைக் கட்டும் போதும், ரஷ்யக் கம்யூ னிஸ்ட் கட்சியும், தொழிலாளி வர்க்கமும் இம்முழக்கத்தைச் செயல்படுத்த ஆவன செய்தன. அவர்கள் போர் வீரர்கள் மத்தி யில் பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர்; ஜாரின் சேனைக்குள்ளேயே கட்சி அமைப் புகளைக் கட்டி சேனைப் படையலகுகளுக்குக் குழி பறித்து அவற்றைப் புரட்சியின் பால் வென்றெடுக்க முயற்சி செய்தனர்; கட்சிக் குள் இராணுவ விஞ்ஞானத்தைக் கற்பதை ஊக்குவித்தனர்; இராணுவ அறிவையும், இராணுவப் பயிற்சியையும் மக்கள் திரளினி டையே செயலூக்கத்துடன் பரப்பினர்; தொழிலாளர்களுக்கும் புரட்சிகர மக்கள் திர ளினருக்கும் ஆயுதங்களை வழங்கினர்; எல்லா இராணுவ அமைப்புகளிலும் கட்சித் தலைமையை நிறுவி அதை வலுப்படுத்தி னர்; புரட்சிகர ஆயுதப் படைகளின் மூலக் கருக்களாக செயல்படும் பொருட்டு தொழி லாளர் குடிப்படைகளையும், படையலகுக ளையும் உருவாக்கினர்; புரட்சிகர படைவீரர் களுடன் தொழிலாளர்களும், விவசாயிகளும் சேர்ந்து இயங்குகின்ற புரட்சிகர ஆயுதப் படையை நிறுவினர்; **இது மூன்று கூறுகளைக் கொண்டதாக இருந்தது.**

(1) ஆயுதமேந்திய பாட்டாளி வர்க்க மும், விவசாயி வர்க்கமும்;

(2) இந்த வர்க்கங்களின் பிரதிநிதிக ளைக் கொண்ட ஒழுங்கமைக்கப் பட்ட முன்னணிச் செயல்வீரர் அல குகள்; (Unit)

(3) மக்களோடு சேர்ந்து கொண்ட சேனை படையலகுகள்.

இதன் காரணமாக புரட்சியால் ஒரு ஆயு தப் படையை கட்ட முடிந்தது. இது பிரதா னமாகக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை யில் செயல்பட்ட ஆயுதமேந்திய தொழிலா ளர்கள், விவசாயிகள் ஆகியோரைக் கொண் டதாக இருந்தது; மக்களின் புரட்சிகரத் தாக்குதலில் அதிர்ச்சிப் படையாக அது செயற்பட்டது; பெப்ரவரி புரட்சியின் வெற் றியிலும் பின்னர் அக்டோபர் புரட்சியிலும் தீர்க்கமான பாத்திரம் வகித்தது.

ரஷ்ய அக்டோபர் புரட்சியின் வெற்றி உலகின் முதல் சோஷலிச அரசைத் தோற் றுவித்தது. இந்த அரசு பகைமை கொண்ட ஏகாதிபத்தியத்தால் சுற்றிவளைக்கப்பட்டது. இந்த வெற்றி மனித வரலாற்றில் ஒரு புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சகாப்தத்தை தோற்றுவித்து வைக்க உத விற்று; முதலாளிய உலகு முழுவதற்கும் அதிர்ச்சியைத் தந்தது. எனவே லெனின் முன்கூட்டியே பார்த்துணர்ந்தது போல, முதலாளிய உலகம் பாட்டாளி வர்க்க அரசை, அது பிறக்கும் போதே கொன்று விட முயன்றது. இந்த ஆக்கிரமிப்பு அபா யம், சோஷலிசத் தாய்நாட்டை ஏகாதிபத் திய ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்க அரசு ஆயுதமேந்த வேண்டிய கட்டாயத் தையும் தனது இராணுவ அமைப்பு வடி வத்தை மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

லெனினின் மாபெரும் பங்களிப்பு கீழ்க் காணும் உண்மையில் தங்கியுள்ளது: மக் களை ஆயுதபாணியாக்குதல் என்ற மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் கோட் பாட்டை லெனின் உறுதி செய்ததுடன், அவர்களது கருத்துக்களை மேலும் வளர்த்து, **ஆயுதமேந்திய மக்களை அடிப்படையாகக் கொண்டு சோவியத் அரசுக்கான ஒரு கிர மமான நிலையான சேனையை, தொழிலாளர் வர்க்கத்தினதும், உழைக்கும் மக்களினதும் புதிய வகைச் சேனையைக் கட்டவேண்டியது அவசியம்** என்ற புதிய கோட்பாட்டையும் உருவாக்கினார்.

மிகப்பெரும் ஆக்கிரமிப்பு அபாயம் இருந்த சமயத்தில், சோவியத் குடியரசு ஏகாதிபத்தியத்தால் எளிதாக வீழ்த்தப் படாமல் இருக்க வேண்டுமானால், அதற் கொரு வலுமிக்க கிரமமான நிலையான சேனை இருக்கவேண்டும் என்பதை லெனின் எடுத்துக் காட்டினார். இச் சேனை, ஆயுதத் தளவாடங்கள் போதுமான அளவு பெற்றுள்ளதும், நன்கு பயிற்றுவிக்கப்பட்ட தும், கடுமையான ஒழுங்குக்குட்பட்டதும், மையப்படுத்தப்பட்ட ஒன்றுபட்ட தலைமை யின் கீழ் செயல்படுவதுமான சேனையாக இருக்க வேண்டும். சரியான பயிற்சியும், நவீன ஆயுதங்களும், தளவாடங்களும் பெற்றுள்ள பெரும் சேனைகள் முதலாளிய நாடுகளில் இருந்தன; சோவியத் அரசின் ஆயுதப்படைகளும் தொடர்ந்து நவீன போர்க் கருவிகளைப் பெற்று வந்தன; நவீன இராணுவக் கலையின் விதிகளுக்கேற்ப, இக் கருவிகளைப் பயன்படுத்துவதைக் கற்றுத் தேற அவர்களுக்கு மேலும் பயிற்சி தேவைப் பட்டது; ஏகாதிபத்தியவாதிகள் எதிர் பாராத திடீர் தாக்குதலைத் தொடுக்க எப் போதும் தயாராக இருந்தனர். இந்தச் சம யத்தில் சோவியத் அரசின் ஆயுதப் படை களை, மக்கள் குடிப்படை வடிவத்திலேயே வைத்திருக்க முடியாது; மாறாக அது ஒரு கிரமமான நிலையான சேனையாக மாறவேண் டும். லெனின் கூறினார்: **''இன்று கிரமமான சேனை முன்னால் நிறுத்தப்பட வேண்டும்.''** இது முதலாளிய சேனையில் இருந்து பண்பு வகையில் **மாறுபட்ட கிரமமான சேனை; இது ஒரு புதுவகைச் சேனை; ஒரு மக்கள் சேனை; புரட்சிகரச் சேனை; சோஷலிசச் சேனை.**

நவீனப் போர் முறைகளின் தேவைக ளைக் கருத்தில் கொள்கையில், குடிப்படை அமைப்புடன் ஒப்பிடும் போது நிலையான சேனைக்குள்ள அனுகூலங்கள் கண்கூடு; எந்த ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தோடும் அது பிணைந்து கிடக்காததால், அதை எங் கும் கொண்டு செல்லலாம்; அது நவீன சாதனங்களையும் தொழில் நுணுக்க சாத னங்களையும் பெற்றுள்ளது; அதனால் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் இரா ணுவ நுட்பங்கள், இராணுவக் கலை ஆகிய வற்றின் தேவைகளுக்கேற்ப முறைப்படி யான நீண்ட கால ஆயுதப் பயிற்சியைப் பெற முடியும்; அதில் நன்கு பயிற்சி பெற்ற, அனுபவமிக்க, தொழில் ரீதியான அதிகாரி கள் இருக்கின்றார்கள்; இக் காரணங்களால், அதன் போரிடும் திறனும், போருக்கான தயார் நிலையும் உயர்ந்த அளவில் இருக் கும்.

முற்றிலும் புதிய பிரச்சினைகளும், பெரும் இடர்ப்பாடுகளும் இருந்த காலகட் டத்தில், லெனினும், ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியும், மக்களின் ஆதரவையும் படைப் பாற்றலையும் சார்ந்து நின்று, பழைய சேனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யைக் கலைத்த போதே, ஒன்றன் பின் ஒன்றாகவும் வெற்றிகரமாகவும் பல பிரச்சினைகளைத் தீர்த்தார்கள். இவை **பாட்டாளி வர்க்க அரசின் புதுவகை கிரமமான சேனை - தொழிலாளி - விவசாயி செஞ்சேனை ஒன்றைக் கட்டுதல் சம்பந்தப்பட்ட** பிரச்சினையாகும். லெனின் செஞ்சேனையின் செயல்பாட்டையும், கடமைகளையும் வரையறுத்தார்; பாட்டாளி வர்க்க சேனையின் புரட்சித் தன்மை; அதன் மக்கள் சார்புத் தன்மை; கட்சி அமைப்பு முறை; சேனைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய அரசியற் பணிகள்; சேனையில் கம்யூனிஸ்ட் கட்சியின் நெருக்கமான தலைமை; இராணுவ ஊழியர்களைப் பயிற்றுவித்து உருவாக்குதல் பற்றிய கொள்கைகள்; அமைப்பு நெறிகள்; சோவியத் சேனைக்கு வேண்டிய ஆயுதங்கள், கருவிகள், கல்வி, பயிற்சி ஆகியவை; சோவியத் இராணுவக் கலை - இப் பிரச்சினைகளுக்கும் செஞ்சேனை சம்பந்தப்பட்ட வேறு சில பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டார்.

செஞ்சேனை கட்டப்பட்டு வருகையில், லெனின் எல்லாவித தவறான போக்குகளுக்கும் எதிரான உறுதி வாய்ந்த போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. 'மக்களை ஆயுதபாணியாக்குக' என்ற கட்சி முழக்கத்தை தவருகப் பயன்படுத்தி, செஞ்சேனை கட்டுவதில் கட்சி கடைப்பிடித்த மார்க்கத்தையும், கொள்கையையும் வெறித்தனமாகத் தாக்க முயன்ற மென்ஷ்விக்குகள், சோஷலிசப் புரட்சியாளர்கள்,★ அராஜக வாதிகள் ஆகியோரின் திட்டங்களை லெனின் தகர்த்தெறிந்தார். கட்சியின் 8வது காங்கிரசில், கட்சிக்குள் இருந்த 'இராணுவ எதிர்ப்புக் குழு'வினரை லெனினும் அவரது போராட்டத் தோழர்களும் தோற்கடித்தனர். இக் குழுவினர் ஒரு கிரமமான செஞ்சேனையைக் கட்டுவதற்கு வேண்டிய கட்டுப்பாடு, மையப்படுத்தப்பட்ட ஒன்றுபட்ட தலைமை போன்றவற்றை எதிர்த்தனர்.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பிறகு, சோவியத் அரசின் இராணுவ அமைப்பின் வடிவம் பற்றிய விவாதம் மீண்டும் ஒரு முறை எழுந்தது. லெனின் தலைமையில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி டிராட்ஸ்கியப் போக்கை உறுதியாக நிராகரித்தது. செஞ்சேனை கலைக்கப்பட்டு அது மக்கள் குடிப்படை அமைப்பில் முற்றுகச் சேர்க்கப்பட்டுவிடவேண்டும் என்பதே டிராட்ஸ்கியப் போக்கு.

லெனினின் ஆய்வுரை மிகவும் தெளிவானதும், சரியானதுமாகும் என்பதை புரட்சிகர நடைமுறை நிரூபித்துள்ளது. சோவியத் அரசை, அது பிறந்தவுடன் கொன்றுவிடும் நோக்கத்தோடு உள்நாட்டு எதிர்ப் புரட்சியாளர்களுடன் சேர்ந்து ஏகாதிபத்திய முகாம் மேற்கொண்ட இராணுவத் தலையீட்டைத் தோற்கடிப்பதில் சோவியத் அரசு பெற்ற வெற்றி, ஜப்பானிய இராணுவ வெறியையும், ஜேர்மனியப் பாசிஸத்தையும் தோற்கடித்து 1941 - 1945ம் ஆண்டு தேசப் பாதுகாப்புப் போரில் சோவியத் யூனியன் பெற்ற மாபெரும் வெற்றி ஆகியவை லெனினின் சரியான ஆய்வுரையுடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் உண்மையை முழு உலகமும் அறியும்:- உலகின் முதல் சோவியத் அரசின் வலுமிக்க கிரம சேனையான சோவியத் செஞ்சேனை தான், ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடிப்பதில் தீர்க்கமான மற்றும் நேரடியான பாத்திரம் வகித்தது. 36 கோடித் துருப்புகளையும், அதிநவீனப் போர்க் கருவிகளையும் கொண்டிருந்த பாசிஸ ஜேர்மனியினதும், இராணுவ வெறி கொண்ட ஜப்பானினதும் ஆக்கிரமிப்புச் சேனைகளைத் தோற்கடித்தது; சோஷலிசத் தாய்நாட்டில் இருந்து ஆக்கிரமிப்பாளர்களைத் துரத்தியடித்து,

★ மென்ஷ்விக்குகள்: ரஷ்யாவின் சமூக ஜனநாயகக் கட்சியிலிருந்த சிறுபான்மையினர்.

சோஷலிசப் புரட்சியாளர்கள்: ஒரு குட்டி முதலாளியக் கட்சியினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் உள்ள பல நாடுகளின் விடுதலைக்கான நேரடிப் பங்களிப்பைச் செய்தது; ஜேர்மனிய நாஜிகளைத் துரத்திச் சென்று அவர்களது மறைவிடங்களிலேயே அவர்களை ஒழித்துக் கட்டியது; இவ்வாறு பாசிஸ அபாயத்தில் இருந்து மனித குலத்தைக் காப்பாற்றியது.

செஞ்சேனையானது, எதிரியைக் காட்டிலும் தான் அரசியலிலும், திடசித்தத்திலும் முற்றிலும் மேம்பட்டது என்பதை மட்டும் நிரூபிக்கவில்லை; எண்ணிக்கைப் பலம், போரிடும் மனிதர்களின் பண்புச் சிறப்பு, நவீன ஆயுதங்கள், கருவிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை அவற்றின் தரம், சேனையின் போர்த்திறன், கட்டளைகளை விடுத்துச் செயல்படுத்தும் கலை ஆகியவற்றிலும் கூட செஞ்சேனை எதிரியை விடச் சிறந்து விளங்கிற்று. இத்தகைய சக்தி படைத்திருந்ததன் காரணமாகத்தான் செஞ்சேனையால் எதிர் தாக்குதலையும், தாக்குதல் நடவடிக்கைகளையும் ஒரேநேரத்தில் மேற்கொள்ள முடிந்தது; ஒரே தாக்குதலில் ஏராளமான எதிரிப் படைப் பிரிவுகளை நிர்மூலமாக்க முடிந்தது; எதிரிகளின் தற்காப்புப்படை நிலைகளில் உடைசல் ஏற்படுத்தி அவற்றில் நுழைந்து, பரந்த பிரதேசங்களை விடுவித்து, போரின் தீர்மானகரமான திருப்புமுனைகளை ஏற்படுத்தி இறுதியில் மகத்தான வெற்றியைச் சாதித்தது.

சோஷலிச அரசின் இராணுவ அமைப்பு பற்றி மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் தத்துவத்தைப் புதிய வரலாற்று நிலைமைகளில் மேலும் வளர்த்து கிரமமான சோவியத் செஞ்சேனையைக் கட்டுதல் என்ற ஆய்வுரையை லெனின் உருவாக்கினர். அது, முதலாளிய உலகின் பகைமிக்க சுற்றிவளைப்பை சோவியத் அரசு எதிர் கொண்டிருந்த நிலைமையில் உருவாக்கப்பட்ட ஆய்வுரையாகும். இந்த ஆய்வுரையின் மதிப்பு கீழ்க்காணும் உண்மையில் தங்கியுள்ளது: ஏகாதிபத்திய காலகட்டத்தில் யுத்த வெறிமிக்க ஏகாதிபத்தியத்திடம் அதிநவீன ஆயுதங்களைக் கொண்ட பிரமாண்டமான ஆக்கிரமிப்புச் சேனைகள் இருக்கும் போது, சோஷலிச அரசு தனது பாதுகாப்பை உத்தரவாதம் செய்து கொள்ள ஆயுதமேந்திய மக்களை மட்டுமல்லாது ஒரு சக்தி வாய்ந்த கிரமமான நிலையான சேனையையும் கொண்டிருக்க வேண்டும் என்பதை லெனின் பாட்டாளி வர்க்கத்திற்குச் சுட்டிக் காட்டினர். புதிய மேம்பட்ட சமூக அமைப்பையும், தொடர்ந்து வளர்ச்சியடைந்துவரும் சோஷலிச, பௌதீக, தொழில் நுட்ப அடிப்படையையும் சார்ந்தும், தனது அரசு யந்திரத்தைப் பயன்படுத்தியும், அதிகாரத்தில் உள்ள பாட்டாளி வர்க்கத்தால் இத்தகையதொரு சேனையை விரைவாகவும் எளிதாகவும் கட்ட முடிந்தது. இது ஒரு புதிய வகையான, நவீன சேனை; சோஷலிச அரசின் தேசிய பாதுகாப்புக்கான உறுதியான அரண்.

அப்படியானல் ஒரு கேள்வி எழுகிறது. இத்தகையதொரு வலுமிக்க, கிரம, நிலையான சேனையை சோஷலிச அரசு கட்ட வேண்டி இருக்கையில் **மக்களை ஆயுதபாணியாக்குதல்** என்ற பிரச்சினை என்னுவது?

**மக்களை ஆயுதபாணியாக்குதல்** என்ற அடிப்படையில் **சோஷலிச செஞ்சேனையைக் கட்டுவது** அவசியமானது என லெனின் கூறினர். அனைத்து ரஷ்ய தொழிலாளர்-விவசாயிகள் - போர் வீரர் சோவியத்துக்களின் மூன்ருவது காங்கிரசில் பேசுகையில் லெனின் ஒரு சம்பவத்தைக் கூறினர்: விறகு பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு மூதாட்டி ஒரு செஞ்சேனை வீரனைப் பார்க்கிருள்; அவனே ஜார் சேனையிலிருந்த படை வீரர்களைப் போல் விறகுகட்டைகளைக் கைப்பற்றுவதற்கு மாருக, அம் மூதாட்டி மேலும் விறகு பொறுக்க ஒத்தாசை புரிகின்ருன். இச் சம்பவத்தைக் கூறிய லெனின், செஞ்சேனை வீரர்களைப் பற்றி மக்கள் ஒரு வித்தியாசமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர் என்ருர். ''துப்பாக்கியோடு வருகிறவனைக்கண்டு இனிமேல் நாம் அஞ்ச வேண்டியதில்லை; ஏனெனில் இவன் உழைக்கும் மக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளைப் பாதுகாத்து, சுரண்டுவோரின் நுகத் தடியை தகர்த்தெறிவான் என்று அவர்கள் பேசுகின்றார்கள்.'' என லெனின் கூறினார். அது ஒரு உண்மையான புரட்சிகரச் சேனை; ஒரு மக்கள் சேனை. செஞ்சேனைக்கும், ஆயுதமேந்திய மக்களுக்குமிடையிலான உறவுகள் பற்றி லெனின் கூறினார்: ''இப்படித்தான் மக்கள் கருதுகிறார்கள். எனவே செங்காவலர்கள் சுரண்டுவோர்களை உறுதியுடன் எதிர்த்துப் போராடுகிறார்கள் என்று கல்வியறிவில்லாத சாமான்ய மக்கள் பேசினால் இப்பிரச்சாரம் வெல்லப்பட முடியாத சக்தியாகி விடுகிறது. இது பல இலட்சக்கணக்கான மக்களின் உள்ளங்களில் பதியும்; 19ம் நூற்றாண்டில் பாரிஸ் கம்யூனால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்ததும், பாரிஸ் கம்யூன் முதலாளி வர்க்கத்தால் தோற்கடிக்கப்பட்டதன் காரணமாக அற்ப ஆயுளே பெற்றிருந்ததுமான ஒரு பணிக்கு அஸ்திவாரம் இடும். இப் பிரச்சாரமானது, **மக்களை ஆயுதபாணியாக்குதல் என்ற அடிப்படையில் சோஷலிச செஞ்சேனையைக் கட்டியெழுப்பும்** சோஷலிசவாதிகளின் கனவை நனவாக்கும்.''

போல்ஷ்விக் கட்சியின் எட்டாவது காங்கிரசில் செஞ்சேனையைக் கட்டும் முயற்சிகளில் கவனம் குவிக்க வேண்டிய தேவையை வற்புறுத்திப் பேசிய லெனின், **கட்சியானது, மக்களின் குடிப்படை அமைப்பைத் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வருகிறது** என்பதைச் சுட்டிக் காட்டினார். இக் காங்கிரஸ் நிறைவேற்றிய செயல்திட்டத்தில், உழைக்கும் மக்கள் அனைவருக்கும் இராணுவப் பயிற்சி கொடுத்தல், மறு ஒழுங்குக்குட்படுத்தப்பட்ட துருப்புகள், அரசு நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள், ஏழை விவசாயிகளின் அமைப்புகள் முதலானவற்றுக்கிடையே நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துதல் ஆகிய கடமைகள் சேர்க்கப்பட்டிருந்தன.

சோவியத் யூனியனில் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு புரட்சிகர மக்களின் ஆயுதப்படைகள், காவலர்கள், தொழிலாளர்கள் - ஏழை விவசாயிகளின் கெரில்லாப் படைப்பிரிவுகள் ஆகியன, எதிர்ப் புரட்சியாளர்களின் கலகங்களுக்கு எதிரான போராட்டத்தில் மிக முக்கிய பங்கு வகித்திருந்தன. தொழிலாளர்கள் - விவசாயிகள் செஞ்சேனை புதிதாகக் கட்டப்பட்ட போது அதன் மையக்கூறாக (Core) இருந்தவர்கள் இந்தச் 'செங்காவலர்கள்' தான்.

பத்து இலட்சம் பேர் கொண்ட வலுமிக்க சக்தியாக செஞ்சேனை வளர்வதற்கு முன்பு, நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்த கெரில்லாப் படைகள், அந்நியத் தலையீட்டாளருக்கும், வெண்காவலர்களுக்கும் எதிரான மக்கள் போராட்டத்தின் முக்கிய சக்திகளில் ஒன்றாக இருந்தன. உள்நாட்டுப் போரின் போது பல்லாயிரக் கணக்கான கெரில்லாக்கள், செஞ்சேனையுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து எதிரிப்படைக் குவிப்பைச் சுற்றிவளைத்து அதற்குப் பின்புறமிருந்து போரிட்டனர். கிரமமான சேனையின் பல படையலகுகள், படைவரிசைகள் உள்நாட்டுப் போரிலிருந்த கெரில்லாப் படைகளிலிருந்தே உருவாக்கப் பட்டன.

உள்நாட்டுப் போரில் பெற்ற வெற்றிக்குப் பிறகு, செஞ்சேனையின் எண்ணிக்கைப் பலத்தைக் குறைத்து அதன் தரத்தை உயர்த்தும் பணி நடைபெற்ற போதும், மக்களின் குடிப்படைகள் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பேணப்பட்டு வந்தன; ஒவ்வொரு காலகட்டத்தினதும் திட்டவட்டமான நிலைமைகளுக்கேற்ப அவற்றின் வடிவங்கள் மாற்றியமைக்கப்பட்டு வந்தன.

ஸ்டாலின் தலைமையில் இருந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ், 1941 - 1945ம் ஆண்டுகளில் நடந்த தேசப் பாதுகாப்புப் போரின் போது, கெரில்லாப் படைகள், குடிப்படைகள், ஆயுதபாணிகளான தொழிலாளர்கள் முதலானோரும் செஞ்சேனையுடன் சேர்ந்து தங்கள் தாய்நாட்டில் ஜேர்மனியப் பாசிஸத்தைத் தோற்கடிப்பதில் ஒரு மாபெரும் பங்கை வகித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்காலிகமாக ஜேர்மானியர்கள் வசம் இருந்த பகுதிகளில், கம்யூனிஸ்ட் கட்சியால் அமைப்புக்குள்ளாக்கப்பட்டிருந்த 10 இலட்சம் கெரில்லாப் போராளிகள் மிக வீரமிக்க போராட்டம் நடத்தினர். அவர்கள் இலட்சக் கணக்கான எதிரித் துருப்புக்களை நிர்மூலமாக்கினர்; ஜேர்மனியத் தரைப்படையின் வலிமையில் பத்தில் ஒரு பங்கை அவர்கள் நகரமுடியாதபடி செய்தனர். முக்கிய போர் முனைகளில் கூட, ஆயுதமேந்திய மக்கள் செஞ்சேனையோடு தோளோடுதோள் நின்று போரிட்டனர். சோவியத் தாய்நாட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும் பாதுகாத்தனர். விரிந்த அளவிலான இராணுவ நடவடிக்கைகளின் போது நூற்றுக்கணக்கான குடிப்படைப் பிரிவுகள் மக்களோடு சேர்ந்து, செஞ்சேனையுடன் ஒருங்கிணைந்து போரிட்டன. யுத்தப் பணிகளிலும் செஞ்சேனைக்குத் துணை நிற்கக்கூடிய பணிகளை மேற்கொள்வதிலும் அவர்களது சாதனைகள் நினைவில் இருந்து மறையாதவையாகும்.

சோவியத் செஞ்சேனை அடிப்படையான பங்கு வகித்த மாபெரும் தேசபக்தப் போரில், சோவியத் அரசின் நிலையான சேனையும், ஆயுதமேந்திய மக்களும் ஒருங்கிணைந்து போரிட்டதானது, நவீன நிலைமைகளில் நடத்தப்படும் மக்கள் யுத்தம் பற்றிய ஒரு பிரகாசமான சித்திரமாகும்.

சோவியத் மக்களும், செஞ்சேனைப் போராளிகளும் ஜேர்மனியப் பாசிஸத்திற்கு எதிராக 1941-45இல் நடந்த மக்களின் புனிதப் போரின் பிரமாண்டமான சக்தியைக் குறித்துப் பெருமிதம் கொள்கின்றனர். மக்களிடையே பிரபலமாக இருந்த ஒரு சோவியத் பாடலில் இப் பெருமிதம் பிரதிபலிக்கின்றது. இப் பாடல் வரிகளில் சில:

''மக்கள் யுத்தம்
அது புனித யுத்தம்.''

அது சோவியத் இராணுவ விஞ்ஞானத்திற்குக் கிட்டிய வெற்றி; மக்கள் யுத்தம் பற்றிய மார்க்சிய - லெனினிய மார்க்கத்துக்கு கிட்டிய வெற்றி; இராணுவ அமைப்பைக் கட்டுவது பற்றி மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரால் வகுக்கப்பட்டதும், புதிய நிலைமைகளுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியால் பிரயோகிக்கப்பட்டதுமான ஒரு கோட்பாட்டிற்கு கிட்டிய வெற்றி.

இரண்டாம் உலகப் போரின் போதும், அதன் பின்னரும் பல்வேறு நாடுகளில் உள்ள மக்களின் புரட்சிகர இயக்கங்கள் புயல்வேகத்தில் வளர்ந்து வந்தன; ஐரோப்பாவிலிருந்து ஆசியா வரையிலும் எங்கு பார்க்கினும் பல எழுச்சிகளும், புரட்சிப் போர்களும் வெடித்தன. பாசிஸத்துக்கு எதிராக செஞ்சேனை ஈட்டிய மகத்தான வெற்றி, உலக மக்களின் புரட்சிகரப் போராட்டத்தின் மகத்தான வெற்றி, பல சோஷலிச நாடுகள் தோன்றுவதற்கும் அவை ஒரு உலக அமைப்பாக அமைவதற்கும் வழி வகுத்தது.

சோஷலிசம், தேசிய விடுதலை, ஜனநாயகம், சமாதானம் ஆகியவற்றுக்காக உலக மக்கள் நடத்தும் போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தை இடைவிடாது தாக்கிவரும் ஒரு புரட்சிகரப் பேரவையைத் தோற்றுவித்துள்ளது.

அக்டோபர் புரட்சி தொட்டும், இரண்டாம் உலகப் போரின் போதும், அதன் பிறகும் தோன்றிய ஆயுதமேந்திய எழுச்சிகள், புரட்சிப் போர்கள் ஆகியவற்றின் சுவாலையில் தான் ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் உள்ள சோஷலிச நாடுகளில் மக்களின் புரட்சிகர ஆயுதப் படைகள் பிறந்து துரிதமான வளர்ச்சியைப் பெற்றன. திட்டவட்டமான நிலைமைகளில் உள்ள வேறுபாடுகள், வெவ்வேறு வரலாற்றுப் பின்னணிகள் ஆகியவற்றின் காரணமாக சோஷலிச நாடுகளின் புரட்சிகர ஆயுதப் படைகளின் வரலாறுகளும், வளர்ச்சி மட்டங்களும், ஸ்தாபனக் கட்டமைப்புகளும் வெவ்வேறாக உள்ளன. ஆனால் அவற்றில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும்பாலானவை உள்நாட்டுப் பிற்போக்கு வாதிகளுக்கும், பாசிஸ ஆக்கிரமிப்புகளுக்கும் எதிராகப் போரிட்ட கெரில்லா இயக்கங்களிலிருந்து பிறந்தவை தான்; கெரில்லா இயக்கங்களிலிருந்தே சேனைகள் உருவாக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டன; அதே வேளையில் பல்வேறு வடிவங்களின் கீழ் மக்கள் திரளினரின் ஆயுதப் படைகளும் உருவாக்கப்பட்டன.

ஆசியாவில், ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார வர்க்க முதலாளியம் ஆகியவற்றுக்கெதிரான நீண்ட, கடினமான ஆயுதமேந்திய போராட்டத்தில், சீன மக்கள் தொழிலாளர்கள் - விவசாயிகள் செஞ்சேனையை ஒழுங்கமைத்து, "மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி, மக்கள் அனைவரையும் ஆயுதபாணியாக்குதல்" என்பதை நடைமுறைப்படுத்தி, ஒரு மகத்தான வெற்றியினை ஈட்டினர். வியட்நமிய மக்கள் ஆயுதமேந்திய எழுச்சிகளையும், புரட்சிகரப் போர்களையும் வெற்றிகரமாக நடத்தினர்; மக்கள் திரளினரை ஆயுதபாணியாக்கி, செஞ்சேனையைக் கட்டுதல் பற்றிய மார்க்சிய-லெனினிய ஆய்வுரைகளை ஆக்கபூர்வமாகப் பிரயோகிப்பதில் பெறும் வெற்றிக்கு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாக இருப்பன பொது மக்களின் ஆயுதப்படைகளாகும்; இது பற்றி நாம் பின்வரும் அத்தியாயங்களில் விளக்குவோம்.

பல்வேறு போராட்ட வடிவங்கள் மூலம், பல காலனிகளும், சார்பு நாடுகளும் கூட பல்வேறு அளவிலான சுதந்திரத்தை வென்றெடுத்துள்ளன.

பல நாடுகள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் சுதந்திரம் பெற்றுள்ளன. அவை தேசிய நாடுகளாகியுள்ளன. இவற்றில், தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பும், காலனிய எதிர்ப்பும் காட்டிய சில நாடுகளில் தேசிய அரசு அதிகாரத்தின் சேனைகளை ஒழுங்கமைப்பதன் மூலம், அதே வேளையில் மக்களையும் ஓரளவுக்கு ஆயுதபாணிகளாக்கியும், தமது ஆயுதப்படைகளைக் கட்ட முயற்சி செய்துள்ளன.

தற்போது அதிகாரத்தையும், தேசிய சுதந்திரத்தையும் வென்றெடுக்க, ஆயுதப் போராட்டங்களை நடத்திவரும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டு மக்கள், தமது திட்டவட்டமான நிலைமைகளில் புரட்சிகர ஆயுதப்படைகளை ஒழுங்கமைப்பதற்கு மேற்காணும் அனுபவங்களிலிருந்து கற்ற பாடங்களைப் பிரயோகித்துக் கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்காவைத் தலைவனாகக் கொண்ட ஏகாதிபத்தியம் பல திசைகளிலிருந்தும் தாக்குதல்களுக்குட்பட்டு தோல்விக்கு மேல் தோல்விகளைச் சந்தித்து வருகிறது. இதன் காரணமாக அது, உலக மக்களின் புரட்சிகரப்போராட்டங்களை எதிர்க்க நயவஞ்சகமானதும், கொடூரமானதுமான கொள்கைகளைப் பின்பற்றி, தனது சிறப்புரிமைகளையும், நலன்களையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ள முயல்கின்றது. இராணுவச் செலவுகளை அதிகரிக்கவும், ஆயுதப் போட்டியைக் கடுமையாக்கவும், பேரழிவு ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும், எல்லாவிடங்களிலும் இராணுவத் தளங்களை நிறுவுவதிலும், இராணுவக் கூட்டொப்பந்தங்களைச் செய்து கொள்வதிலும் கடும் பிரயத்தனம் செய்கின்றது; இடைவிடாத இராணுவத் தலையீடுகளை மேற்கொள்கிறது. 'விசேடமான' மற்றும் 'வரம்பு செய்யப்பட்ட' ஆக்கிரமிப்பு யுத்தங்களைச் செய்கின்றது; ஒரு புதிய உலக போருக்கான தயாரிப்பைச் செய்கிறது.

சோஷலிசத் தாய்நாட்டையும், உலக சமாதானத்தையும் பாதுகாக்கவும், ஏகாதிபத்தியத்தின் போர்த் திட்டங்களையும் சூழ்ச்சிகளையும் முறியடிக்கவும் சோஷலிச நாடுகள் தமது பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்திக் கொள்ள கடும் முயற்சி செய்கின்றன; அதே வேளையில் பொருளாதார நிர்மானப் பணியிலும், விஞ்ஞான தொழில் நுணுக்க வளர்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. மேன்மையான சோஷலிச சமூக அமைப்பையும், சோஷலிசத்தின



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தும், கம்யூனிசத்தினதும் பௌதீக தொழில் நுணுக்க அடிப்படையைக் கட்டுவதில் ஈட்டியுள்ள சாதனைகளையும் சார்ந்து நின்று, சோஷலிச நாடுகள் தமது திட்டவட்டமான நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் நவீனமயமான புரட்சிகரச் சேனைகளைக் கட்டுவதில் ஈடுபட்டுள்ளன. சோஷலிச சேனைகளின் புரட்சிகரத் தன்மையை அந் நாடுகள் இடைவிடாது உயர்த்திக் கொண்டேயிருக்கின்றன; அணு ஆயுதங்கள், ஏவுகணைகள், மரபு வழி ஆயுதங்கள் உள்ளிட்ட புதிதுபுதிதான நவீன ஆயுதங்களையும், சாதனங்களையும் இச் சேனைகளுக்கு வழங்கி வருகின்றன.

ஒரு நவீன சேனையைக் கட்டுவதில் சோஷலிச நாடுகள், ஒரு விரிந்த அளவிற்கு தொழிலாளர்கள், கூட்டுப்பண்ணை விவசாயிகள் ஆகிய மக்கள் திரளினரை ஆயுதபாணியாக்குவதற்கு பெருங்கவனம் தருகின்றன. மக்களின் ஆயுதப்படைகளின் வடிவங்களும், அவற்றின் ஆயுதங்களும், சாதனங்களும் இந் நாடுகளின் தேவைகளுக்குப் பொருந்துகின்ற வகையில் உருவாக்கப்படுகின்றன. தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், நாட்டைக் காப்பதிலும் மக்கள் சக்தியையும், சோஷலிச அமைப்பின் சக்தியையும் மிக உயர்ந்த அளவிற்கு வளர்க்கும் நோக்கத்தோடேயே இவை செய்யப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட தத்துவார்த்த நடைமுறை அடிப்படையிலிருந்து நாம் வகுத்துக் கொள்ள வேண்டிய முடிவுகள் என்ன? கீழ் வரும் முடிவுகளே அவை:

**புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்குதல் என்பதை புரட்சிகரச் சேனையைக் கட்டுதல் என்பதோடு இணைத்துச் செய்தல் என்பது தான், சோஷலிச நாடுகளின் பாதுகாப்பு அமைப்பின் இராணுவ அமைப்பு வடிவம்; விடுதலைப் போர்களின் இராணுவ அமைப்பு வடிவம், நம் காலத்தில்** மக்கள் நடத்தும் தேசிய விடுதலைப் போர்கள், புரட்சிகரப் போர்கள் ஆகியவற்றின் இராணுவ **அமைப்பு வடிவம் ஆகியன பற்றிய முழுமையான மார்க்சிய - லெனினிய கோட்பாடாகும்.** மக்களை ஆயுதபாணியாக்குதல் என்பது மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் ஆய்வுரை; இதை விரிவுபடுத்தி மக்களை ஆயுதபாணியாக்குதல் என்பதை அடிப்படையாகக் கொண்டு புரட்சிகரச் சேனையைக் கட்டுதல் என்பது லெனினின் ஆய்வுரை; நாம் மேலே கூறியது மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரது ஆய்வுரைகளின் விரிவாக்கமேயாகும்.

மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோர் பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்பட்ட மக்களும் இராணுவ அமைப்புகளைக் கட்டுவதில் பெற்ற அனுபவத்தை இவ்வாறு தொகுத்துக் கூறியுள்ளனர். இந்த இராணுவ அமைப்புகள், அதிகாரத்தைக் கைப்பற்றி அதைப் பாதுகாக்க பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்பட்ட மக்களும் நடத்திய நீடித்த புரட்சிகரப் போராட்டத்தின் போது கட்டியமைக்கப்பட்டவையாகும். ஓரளவிற்கு இது மார்க்சியம் தோன்றுவதற்கு முன்னைய வரலாற்றுக் காலகட்டங்களில் புரட்சிகர வர்க்கங்களும், ஒடுக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் இலக்கானவர்களும் ஆயுதப் படைகளை அமைப்பதில் பெற்ற அனுபவத்தின் தொடர்ச்சியாகவும், அதன் ஆக்கபூர்வமான வளர்ச்சியாகவும் இருக்கின்றது என்றும் கூறலாம்.

முதலாளி வர்க்கம், ஏகாதிபத்தியவாதிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் ஆட்சியைத் தூக்கியெறிவதற்கான புரட்சிகளைப் பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் தொடக்குகையில் அவர்களிடம் சேனை ஏதும் இருக்கவில்லை; எந்தப் புலமுமில்லாமல் தான் புரட்சியைத் தொடங்கினர். புரட்சியின் போக்கில், ஆயுதமேந்திய போராட்டம், ஆயுத எழுச்சி என்ற பிரச்சினை எழுந்த போது, பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் தமது சொந்த இராணுவ அமைப்புகளை உருவாக்க வேண்டியிருந்தது. இந்த இராணுவ அமைப்பின் ஆரம்ப வடிவம் ஆயுதபாணியாக்கப்பட்ட மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பது நியதியாகி விட்டது; புரட்சிச் சேனை, ஆயுதபாணியாக்கப்பட்ட மக்கள் என்ற அடித்தளத்திலிருந்து படிப்படியாகக் கட்டப்பட்டது. ஆயுதமேந்திய எழுச்சிகளில் வழக்கமாக முதன்மைப் பாத்திரம் வகிப்பது ஆயுதமேந்திய மக்கள் தான்; சில சமயங்களில் அதிர்ச்சிப்படைப் பாத்திரம் புரட்சிகரச் சேனையால் வகிக்கப்பட்டது. எழுச்சிகள், புரட்சிகரப் போர்களாக வளர்ச்சி பெற்ற போது சேனையின் முக்கியத்துவம் மென்மேலும் அதிகரித்து வந்தது; புரட்சிகர ஆயுதப்படைகள் என்பன சேனை, ஆயுதமேந்திய மக்கள் இரண்டையும் உள்ளடக்கலாயின.

கிரம மற்றும் நிலையான புரட்சிகரச் சேனையைக் கட்டுதல் என்ற பிரச்சினையை, பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் அதிகாரத்தை வென்றெடுத்துத் தங்களுக்கென ஒரு அரசைப் பெற்றிருக்கையில் தான் தீர்க்க முடியும். **சோஷலிச அரசின், மக்கள் ஜனநாயக அரசின் இராணுவ அமைப்பு வடிவம், ஒரு கிரமமான நவீனரக புரட்சிகரச் சேனை, ஒரு பரந்த அளவில் ஆயுதபாணியாக்கப்பட்ட மக்கள் திரளினர் ஆகிய இரண்டும் இணைந்ததாகும்.** சோஷலிச அரசு, மக்கள் ஜனநாயக அரசு மக்களின் போர் ஆற்றலையும், தனது போர் ஆற்றலையும் உயர்ந்த பட்சம் வளர்க்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றது. ஆயுதமேந்திய மக்களும், புரட்சிகரச் சேனையும் அரசின் ஆயுதப் படைகளின் இரு கூறுகளாகும். இதில் நிலையான சேனையே மையக்கூறு; ஆயுதமேந்திய மக்களோ விரிவுபடுத்தப்பட்ட சக்தியாகும். அதனுல்தான், ஆயுதபாணியாக்கப்பட்ட மக்கள் படைகளை வளர்க்கும் போதே சேனையைக் கட்டுவதற்குக் கவனம் செலுத்தப்பட வேண்டும். **மேலே சொல்லப்பட்ட இருகூறுகளும் சோஷலிச அரசின் ஆயுதப் படைகளில் நெருக்கமாக இணைந்திருப்பது** சுரண்டும் அரசுகளை விட சோஷலிச அரசு முற்றிலும் மேம்பட்டதாக இருப்பதற்கு ஒரு காரணமாகும்.

சுரண்டும் வர்க்கங்களின் அரசு ஆட்சிகளில் ஆளும் வர்க்கங்களின் நலன்களும், உழைக்கும் மக்களின் நலன்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டிருப்பதால், ஒரு புறம் பரந்துபட்ட மக்களுக்கும் மற்றொரு புறம் அரசு மற்றும் அதன் நிலையான சேனை ஆகியவற்றிற்கும் இடையில் ஓர் அடிப்படையான முரண்பாடு நிலவுகின்றது. ஆயுதமேந்திய புரட்சிகர மக்கள் தனக்கு ஒரு ஆபத்தாகும் என்று ஆளும் அரசு கருதுகிறது. பிற்போக்கு ஆட்சியாளர்கள், மக்களை ஆயுதபாணியாக்குவதை விட எதிரியிடம் நாட்டை ஒப்படைத்துவிடத் தயாராக இருப்பார்கள். இவர்கள் மக்களோடு ஐக்கியப்படுவதற்குப் பதிலாக தங்கள் வர்க்கத்தைச் சேர்ந்த கொடிய எதிரியுடன் சமரசம் செய்து கொள்வார்கள் என ஏங்கெல்ஸ் ஒரு முறை குறிப்பிட்டார். நிலப்பிரபுத்துவ வர்க்கமும், முதலாளி வர்க்கமும், அவை வரலாற்றில் முற்போக்குப் பாத்திரம் வகித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், தேசிய உணர்வு கொண்டிருந்த சமயத்தில், ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நிலையான சேனையுடன் தோளோடு தோள் நின்று போரிட மக்களை ஆயுதபாணிகளாக்கிய சம்பவங்களும் உண்டு. ஆனுல் அப்போதெல்லாம் மிகவும் வரம்புக்குட்பட்ட அளவிலேயே மக்கள் ஆயுதபாணியாக்கப் பட்டனர்.

சோஷலிச ஆட்சியிலோ, நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. சுரண்டும் வர்க்கங்கள் தூக்கியெறியப்பட்டுள்ளன; மனிதனை மனிதன் சுரண்டும் முறை ஒழித்துக் கட்டப் பட்டுள்ளது. உழைக்கும் மக்களின் கூட்டுத்தலைமை நிறுவப்பட்டுள்ளது. தேசிய மற்றும் கூட்டுடமை முறை உருவாக்கப்பட்டுள்ளது. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் பிரதான வன்முறைக் கருவியான சோஷலிச ஆயுதப்படைகளின் செயல்பாடு, புதிய ஆட்சியைப் பாதுகாப்பதும், உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களை நசுக்குவதும், உழைக்கும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதும் ஆகும். புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமுதாயத்தில் உள்ள இந்த உயர்ந்த அரசியல் மற்றும் தார்மீகத் தனித் தன்மையும் தொடர்ந்து வளர்ச்சி பெற்றுவரும் சோஷலிசப் பௌதீக தொழில் நுட்ப சக்திகளும், புதிய வகை நவீன ஆயுதப் படைகளைக் கட்டி புரட்சிகரச் சேனையினதும், ஆயுத மேந்திய மக்களினதும் ஒன்றிணைந்த போராற்றலைப் புதிய மட்டங்களுக்கு உயர்த்துவதற்கான மிக உறுதியான அடிப்படையாக அமைகின்றன. **வரலாற்றில் முதல் முறையாக தொழிலாளர்களையும், விவசாயிகளையும் ஆயுதப் படைகளில் சேர்த்திருப்பவை சோஷலிச அரசின் ஆயுதப் படைகள்தான். இந்தத் தொழிலாளர்களும், விவசாயிகளும் தமது எதிர்காலத்தை தாமே தீர்மானிப்பவர்களாக விளங்குகின்றனர்; மிக உயர்ந்த அரசியல் உணர்வைப் பெற்றுள்ள இவர்கள் சோஷலிச, கம்யூனிச இலட்சியத்திற்காக அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பவர்கள். அவர்கள் வெல்லப்பட முடியாத ஆயுதப் படையினர் ஆவர்.**

—ஜெனரல் கியாப்

□□

## சிறைச்சாலை இளைஞர்களின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்

*1983 ஜூலைக் கலவரத்தினதும், வெலிக்கடைப் படுகொலைகளினதும், பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நூற்றுக் கணக்கான இளைஞர்கள் சிறீலங்கா அரசின் சிறைச்சாலைகளில் அடைக்கப் பட்டுள்ளார்கள். இப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை பதினெட்டு மாத காலங்களுக்கு விசாரணை இன்றி வைத்திருக்க முடியும். இக் கொடிய சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் 18 மாத காலத்திற்கு மேலாகியும் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்விளைஞர்களை சர்வதேச மன்னிப்புச் சபையோ செஞ்சிலுவைச் சங்கமோ பார்வையிட இனவெறி யு. என். பி. அரசு அனுமதிக்கவில்லை.*

*இவ்வாறு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் தம்மை விசாரணை செய்யக் கோரியும், குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் படாதவர்களை விடுதலை செய்யக் கோரியும் ஆவணி எட்டாந் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் தொடர்ந்து 'சாகும் வரை உண்ணாவிரதப்' போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். இவர்களது இப் போராட்டத்திற்கு ஆதரவாக ஹர்த்தால்களும், யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டமும் நடைபெற்றது.*

*சிறையில் வாடும் எம் சகோதரர்களின் இவ் உறுதியான போராட்டத்திற்கு தமிழீழ தேசிய விடுதலை முன்னணி தனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.*

*வெல்க சிறைச்சாலை இளைஞர்களின் போராட்டம்!*

*வெல்க தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம்!*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரித்திரிய மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமும் வல்லரசுகளின் சதியும்

ஆபிரிக்காவின் மேற்பகுதியும், மத்திய கிழக்கும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது எரித்திரியா. இது உலகின் மூன்றிலிரு பகுதி எண்ணெய்க்குரிய மூலவளங்களைக் கொண்ட அராபிய உலகுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட ஒரு ஆபிரிக்க நாடு. செங்கடலையொட்டி ஆயிரம் கிலோமீட்டர் கடலோரப் பகுதி கொண்டது. இந்து சமுத்திரம் செங்கடலுக்குள் பிரவேசிக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ளது எரித்திரியா. சுயஸ் கால்வாயை மீண்டும் திறந்துவிட்டபின், இந்த இடத்தின் இராணு முக்கியத்துவம் பெரிதும் அதிகரித்துள்ளது. கடல்வளம், எண்ணெய், இயற்கை எரிவாயு, தாமிரம், பொட்டாஷ், தங்கம், இரும்பு மூலகங்கள் மற்றும் பிற கனிவளங்களைக் கொண்டது எரித்திரியா. இந்தப் பொருளாதார, இராணுவ முக்கியத்துவத்தால், இந்தப் பிரதேசம் முழுவதும் (செங்கடல், அராபிய குடாப் பகுதி நாடுகள்) ஏகாதிபத்தியத்தை தலைமை பூண்ட எதிர்ப்புரட்சி சக்திகளுக்கும், தேசிய விடுதலை இயங்கங்களை நடத்தும் முற்போக்குச் சக்திகளுக்கும் இடையே கடும் போர் வெடித்துள்ளது. இப் பிரதேசம் ஆயுதப் போராட்டத்தின் களமாக ஆக்கப்பட்டுள்ளது.

எரித்திரிய வரலாறு, மூன்றும் உலகின் வரலாற்றில் பிரிக்க முடியாதவாறு பிணைந்துள்ள ஒரு பகுதியாகும். தொடர்ச்சியாக கொடூரமான சமூக அடக்குமுறையையும், அந்நியரின் வலுத்தாக்குதலையும் எரித்திரிய மக்கள் எதிர்த்துப் போராடி வந்துள்ளனர். எரித்திரியா இருக்குமிடத்தால் பெற்றுள்ள இராணுவ முக்கியத்துவத்தால், அது காலனிய வலுத்தாக்குதலுக்கும், ஏகாதிபத்தியக் கொள்ளைக்கும் நூற்றுண்டுக் கணக்கில் இரையாகி வந்துள்ளது. எரித்திரிய மக்கள், ஒட்டோமன் துருக்கியரையும் (1557 - 1865), எகிப்தியரையும் (1865 - 1876), இத்தாலிய (1869 - 1941) பிரித்தானிய (1941 - 1952) காலனியவாதிகளையும் உத்வேகத்துடன் எதிர்த்துப் போராடியுள்ளனர்.

இன்றுள்ள எரித்திரியாவின் ஒரு பெரும் பகுதியும், திக்ராய் என்ற பகுதியின் சில பகுதிகளும் (இப் பகுதி இன்று எதியோப்பியாவின் வட மாகாணமாக உள்ளது.) அன்று அக்சுமைட் ராஜ்யமாக அமைந்திருந்தன. இப் பழம்பெரும் ஆபிரிக்க நாகரீகம் கி.மு. 4ம் நூற்றுண்டு முதல் கி.பி. 7ம் நூற்றுண்டு வரை சிறப்புற்றிருந்தது. இந்த ராஜ்யம் கி.பி. 8ம் நூற்றுண்டில் அழிந்தபின், இன்றைய வடக்கு சூடான், வட-மத்திய எதியோப்பியா, கிழக்கு எகிப்து, அராபிய தீபகற்பம் என அழைக்கப்படும் பகுதிகளிலிருந்து அன்று அலை அலையாக வந்த படையெடுப்புகளுக்கும், குடிபெயர்ச்சிகளுக்கும் ஏற்ற ''உருகும் சட்டி''யாகிற்று எரித்திரியா. சில



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

காலங்களில் சிறுசிறு போட்டிச் சிற்றரசுகள் பல உருவாகி மேலாதிக்கத்திற்கும், மேலாண்மைக்கும் ஒன்ருேடொன்று போரிட்டன. இத்தகைய உள்நாட்டு மோதல்கள், வெளிநாட்டு ஆக்கிரமிப்பிற்கு ஏற்ற வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தன.

1557ல் ஒட்டோமன் துருக்கியர், மஸ்ஸாவா என்ற முக்கியத் துறைமுகம் இருக்கும் எரித்திரியாவின் வடக்குக் கடற்கரையைக் கைப்பற்றினர். அதே காலத்தில், சூடான் நாட்டின் ஃபங் அரசு, எரித்திரியாவின் மேற்கத்திய தாழ்நிலங்களில் புகுந்து கொள்ளையடித்தது. இவ்விரு நாட்டவரும் எரித்திரிய மேட்டு நிலப்பகுதிகளைக் கைப்பற்ற பலமுறை முயன்றனர். ஆனால் ஒவ்வொரு முறையும் விரட்டியடிக்கப்பட்டனர். பலமுறை இப்படைகள் நிர்மூலமாயின; அல்லது சற்று காலங்கழித்து ஒழிக்கப்பட்டன.

1869ல் சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டது; இது சர்வதேச வாணிபம், தொடர்பு ஆகியவற்றில் செங்கடலின் முக்கியத்துவத்தை உயர்த்திற்று; மேலும் இதனால் எரித்திரியாவின் இராணுவ முக்கியத்துவம் அதிகரித்தது. இதே வருடத்தில் இத்தாலிய மிஷனரிகளும், வியாபாரக் கம்பெனிகளும் அஸ்ஸாப் எனுமிடத்தில் வந்திறங்கினர். எகிப்து, பிரித்தானிய ஆதரவுடன் துருக்கியர் வசமிருந்த மஸ்ஸாவா துறைமுகத்தைக் கைப்பற்றி, கடற்கரையோரச் சமவெளி, மேற்கத்திய தாழ்நிலப் பகுதி ஆகியவற்றைப் பிடித்துக்கொண்டது. அதே சமயம், பீடபூமிப் பகுதியில் அதற்குப் பலத்த எதிர்ப்பிருந்தது.

எரித்திரிய பீடபூமிப் பகுதி, உள்நாட்டு, வெளிநாட்டுப் போர்களின் களமாக இருந்துள்ளது. அவ்வப்போது சிற்றரசர்கள் எழுந்து தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தி






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களைக் கொள்ளையடித்தனர். இன்றைய எதியோப்பியாவின் வடபகுதியில் அன்று, சக்திவாய்ந்த போர்த் தலைவர்கள் அடுத்தடுத்துப் போரிட்டு மக்களைக் கொள்ளையடித்தனர். மக்களிடமிருந்து திறை வசூலித்தினர். ஆனாலும் ஒரு குறுகிய காலகட்டம் தவிர (1880 - 1889) இவருள் எவருமே மக்களை முழுதாக அடிமைப்படுத்தி இப் பீடபூமி மேல் உறுதியான ஆதிக்கத்தை நிலைநாட்டவில்லை.

இதற்குள்ளே ஆபிரிக்காவை காலனிகளாகப் பங்குபோடும் ஐரோப்பிய வேட்டை முழுவேகத்தில் செயல்பட்டது. ஆபிரிக்காவின் மேற்பகுதியில் ஆங்கில - பிரெஞ்சு காலனிப் போட்டாப் போட்டி உத்வேகம் பெற்றது. பிரெஞ்சு விரிவாக்கத்தைத் தடுக்க நினைத்த பிரிட்டன், அப்போது ஆங்கில-எகிப்திய மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடிய சூடான் மக்களின் போராட்டத்தில் சிக்கியிருந்தது. எரித்திரியாவின் மஸ்ஸாவா துறைமுகத்தை, இத்தாலியைக் கைப்பற்றுமாறு அழைத்து பின்னர் உள்நாட்டை ஆக்கிரமித்தது.

1869ல் அஸ்ஸாப் பகுதியில் நடந்த இத்தாலிய ஆக்கிரமிப்பு முதல் 1889ல் எரித்திரியாவில் இத்தாலியக் காலனி நிலை நாட்டப்பட்ட காலம் பூராவும் எரித்திரிய மக்கள் வீரப் போர் புரிந்தனர். எனினும், இறுதியில் இத்தாலிய காலனியத்தின் மேம்பட்ட ஆயுத பலத்தால் எரித்திரிய மக்களின் மாபெரும் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது. மேலும் இத்தாலிக்கு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் உதவியும் கிடைத்தது.

ஆபிரிக்காவின் இதர நாடுகளைப் போன்றே, ஐரோப்பிய காலனியத்தின் கீழ் எரித்திரியாவும் ஒரு தேசமாக ஒட்டப்பட்டு இதன் பொருளாதார, அரசியல், பண்பாட்டு ஒன்றிணைப்பு தொடங்கிற்று. இத்தாலிய காலனியம், ஓர் ஐரோப்பிய குடியேற்றத்தை ஏற்படுத்துவதற்காக எரித்திரிய மூலவளங்களையும், மனித சக்தியையும், கண் மண் தெரியாமல் சுரண்டிற்று. ஆபிரிக்காவில் தனது ஏகாதிபத்திய பேராசைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு தளமாக எரித்திரியாவை மாற்றியது; மேலும் லிபிய, சோமாலிய, எதியோப்பிய மக்களுக்கு எதிராக அது நடத்திய காலனிய வலுத்தாக்குதலுக்கு எரித்திரிய மக்களைப் பலியிட்டது. இந்த காலனிய நோக்கங்களுக்கு ஒரு குறிப்பிட்ட பொருளாதார உருமாற்றம் அவசியம். (முக்கியமாக அடிக்கட்டுமானம்) இத்தகைய உருமாற்றத்தால், புதிய சமூக சக்திகளும், தேசிய விடுதலைக்கான ஒருங்கிணைந்த போராட்டத்தின் தேவை பற்றிய உணர்வும் தோன்றின.

இதன் விளைவாக இத்தாலிய பாசிசத்தின் மிருகத்தனமான காலனிய, சமூக, இனவாத அடக்குமுறைக்கு எதிராக எரித்திரிய மக்கள் கடும் எதிர்ப்பைக் காட்ட முன்வந்தனர். இந்த எதிர்ப்பு, 1941ல் இத்தாலியப் படைகளை வெல்லுவதற்கு பிரித்தானிய அணிக்குப் (நேச நாடுகள்) பெரிதும் உதவிற்று. ஆனால், எரித்திரிய சுதந்திரத்தை ஆதரித்த பிரித்தானிய அரசு, தனது போர்க்கால வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு, இத்தாலியரை அகற்றித் தானே புதிய காலனியாதிக்க சக்தியாகியது. பிரித்தானிய காலனியம், எரித்திரியாவின் மூலாதாரங்களையும், உற்பத்தியாதாரங்களையும் கண்மூடித்தனமாகக் கொள்ளையடித்தது மட்டுமின்றி, மிகத் தந்திரமாக எரித்திரியாவை எதியோப்பியாவுடனும், சூடானுடனும் பிரித்து இணைத்து அதன் மூலம் மக்களைப் பாகுபடுத்தி, நாட்டை அழிக்கவும் முயன்றது. இதற்காக வேண்டி, சமயப் பூசல்களைத் தூண்டி வளர்த்தது.

எரித்திரிய மக்கள் இதனை வலுவாக எதிர்த்தனர். இதை ஒட்டிய சகலவிதமான ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை எதிர்த்து, சுய-நிர்ணய உரிமையைக் கோரினார்கள். நாட்டின் பொருளாதார, அரசியல் ஒருங்கிணைப்பும் ஒன்றாக இணைந்து காலனிய அடக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறையை எதிர்த்து மக்கள் பெற்ற அனுபமும், ஏற்கனவே மக்களிடம் தேசிய உணர்வு, ஒருமைப்பாடு ஆகியன பற்றி ஒரு பருண்மையான உணர்வை உண்டாக்கியிருந்தன. 1940களின் மத்தியில் சுதந்திரப் போராட்டம் புதுவேகமுற்றது. மக்களிடம் ஏற்பட்ட அரசியல் உணர்வினுல் அரசியல் கட்சிகள் உதித்தன. போராட்டம் ஓர் அமைப்பாக உருவெடுத்தது.

என்ருலும் எரித்திரிய மக்களின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்கான ஆர்வங்களையும், நியாயமான கோரிக்கைகளையும் சீண்டிப் பார்ப்பதற்காக ஏகாதிபத்தியம் சதியாலோசனை செய்தது. இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த எரித்திரியாவைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், ஏகாதிபத்தியத்தின் நவகாலனி நாடான எதியோப்பியாவிற்குக் ''கடல் வழி'' ஏற்படுத்தவும், ஏகாதிபத்தியம் ஒரு சதித்திட்டத்தைக் கொண்டு வந்தது. அன்று, 1950ல் அமெரிக்காவின் மேலாதிக்கத்திலிருந்த ஐக்கிய நாடுகள் சபையில், எரித்திரியாவை எதியோப்பியாவுடன் சமஷ்டி அமைப்பில் இணைத்துவிடும் தீர்மானத்தை நிறைவேற்றியது (390 A/V). இவ்வாறு 1952ல் தரை எல்லைகளைக் கொண்ட ஒரு நிலப்பிரபுத்துவ எதியோப்பிய ராஜ்யத்துடன் ஒருவித பொய்யான சமஷ்டி அமைப்பில் பலவந்தமாக எரித்திரியா இணைக்கப்பட்டது. தேச சுதந்திரத்தை நாடிய எரித்திரிய மக்களின் நியாயமான விருப்பங்களுக்கு இது முற்றிலும் விரோதமானது.

எனினும் சொற்ப அளவில் ஜனநாயக வழிமுறைகளைக் கொண்டுள்ள எரித்திரிய அரசியல் நிர்ணயச்சட்ட அமைப்பால் கூட, பழமையில் ஊறிய எதியோப்பிய அரசாட்சியின் முற்றிய கொடுங்கோன்மையுடன் சகவாழ்வு கொள்ள முடியவில்லை. எரித்திரிய தேசிய சுய ஆட்சி படிப்படியாக மழுங்கடிக்கப்பட்டு இறுதியில் சுத்தமாக ஒழிக்கப்பட்டது. தங்களுடைய ஜனநாயக உரிமைகள் கொடுமையாகப் பறிக்கப்படுவதையும், மனித உரிமைகள் குரூரமாக மறுக்கப்படுவதையும் எதிர்த்து எரித்திரிய மக்கள் அமைதியான முறைகளில் போராடினுர்கள்; எதிர்ப்பு ஊர்வலம் சென்று ஐக்கிய நாடுகள் சபைக்காக மனுக் கொடுத்தார்கள். 1958ல், எரித்திரிய சுயாட்சி பறிக்கப்பட்டதையும், எரித்திரிய தேசியக் கொடி இறக்கப்பட்டதையும் கண்டித்து, எரித்திரிய தொழிலாளர்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தம் செய்தனர். இது நான்கு நாட்கள் நீடித்தது; நவகாலனிய பொருளாதாரத்தை ஸ்தம்பிக்கச் செய்தது. இதனை ஒடுக்கவந்த எதியோப்பிய அரசாட்சி, 550 தொழிலாளரை மிருகத்தனமாகக் கொன்றது; பலரைக் காயப்படுத்தியது.

ஆயுதமற்ற தொழிலாளர் மீது நடத்திய காட்டுமிராண்டித்தனமான படுகொலை, இனியும் அமைதி வழியில் எதிர்ப்பைக் காட்டுவதன் அர்த்தமற்ற தன்மையை உணர்த்திவிட்டது. எரித்திரிய தேசபக்தர்கள், ஆயுதப் போராட்டத்திற்காக இரகசியமாக எரித்திரிய விடுதலை இயக்கத்தைக் கட்டினுர்கள். ஆனுல் பாசிஸ அடக்குமுறை இவ் வியக்கத்தாரைக் கொன்றும், சிறையிட்டும் இதன் தலைவர்களை நாடு கடத்துவதாக அச்சுறுத்தியும் இவ்வியக்கத்தை முழுமையாகச் சீர்குலைத்தது. இறுதியாக, 1962ல் இதற்கும் மேலாக ஒருபடி சென்று, ஹெய்லி செலாசியின் மட்டமான அரசாங்கம் சட்டத்திற்குப் புறம்பாக, தன்னிச்சையாக சமஷ்டி அமைப்பை நீக்கி, வலுக்கட்டாயமாக எரித்திரியாவை ''எதியோப்பிய பேரரசின் 14வது மாகாணமாக'' பிரகடனம் செய்தது.

அமெரிக்காவைத் தலைமையாகக் கொண்ட உலக ஏகாதிபத்தியத்தின் விருப்பத்தின்படி தான் இச் செயல்கள் நடைபெற்றன. எரித்திரிய மக்களின் விருப்பத்தின்படி நடக்கவில்லை; எதியோப்பிய வெகுஜனங்களின் விருப்பத்தின்படியும் இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடக்கவில்லை. எரித்திரியாவை எதியோப்பியா கைப்பற்றிக்கொண்டதற்குக் காரணம் ஏகாதிபத்தியவாதிகளும், யூத இன வெறியருமேயாவார்கள். இது, இவர்தம் நலன்களுக்கு ஏற்றதாக இருந்தது. இந்நாட்டில் இவர்கள் தம் இராணுவத் தளங்களைக் கட்டியிருந்தனர். இதன் இயற்கை வளத்தையும், மலிவான உழைப்பையும் சுரண்டிக் கொண்டனர், இங்கு அமெரிக்காவின் இந் நடவடிக்கைக்கு கிடைத்த பரிசு எரித்திய தலைநகர் அஸ்மருவில் உள்ள கக்னு தொடர்பு நிலையமாகும்.

இவ்வாறாக, நூற்றாண்டுக் கணக்கில் காலனியவாதிகளும், தற்போது ஏகாதிபத்தியச் சார்புள்ள ஆபிரிக்க ஆதிக்கவாதிகளும், எரித்திரியா மீது படையெடுத்துள்ளனர்; அதன் எல்லைகளை அழித்துள்ளனர்; அதன் செல்வங்களைச் சூறையாடியுள்ளனர். அதன் வரலாற்றைப் பொய்யாகப் புனைய முயன்றுள்ளனர்; அதன் சமூக - பொருளாதார வளர்ச்சியை அடைத்துவிடவும் மக்கள் தம் மொழிகளையும், பண்பாட்டு வாழ்வையும் நசுக்கிவிடவும் முயன்று வந்துள்ளனர். சுருக்கமாகச் சொன்னால், காலனியமானது எரித்திரிய மக்களின் இயற்கை வளங்களையும், உழைப்பு, நிலத்தின் பலன்கள் ஆகியவற்றையும், ஜனநாயக, தேசிய உரிமைகளையும், மனித கௌரவத்தையும் பறித்துவந்துள்ளனர்.

இதன் காரணமாக, இந்த வரலாற்று அநீதிகளைக் களைவதற்காக எரித்திரிய மக்கள் உறுதியாக எழுந்துள்ளனர். இவர்கள் தங்கள் வரலாற்றில் ஒருக்காலும் அந்நிய மேலாதிக்கத்தை ஏற்றதில்லை; அடக்கு முறைக்குத் தலைவணங்கியதில்லை. இன்றைக்கு எரித்திரிய மக்கள், எதியோப்பியாவினதும், வல்லரசுகளினதும் பிடியிலிருந்து தங்கள் நாட்டை விடுவிக்கப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இன்று நடக்கும் இத் தேசிய விடுதலைப் போரானது தேசிய சுதந்திரத்தின் பொருட்டு, காலனிய மேலாதிக்கத்துக்கு எதிராக எரித்திரிய மக்கள் நடத்தும் வரலாற்று ரீதியான போராட்டத்தின் ஒரு தொடர்ச்சியாகும்.

## ஆயுதப் போராட்டத்தின் வரலாறு

சுதந்திரத்திற்கான சாத்தியமான சகல வழிகளும் அடைபட்டுப் போனபின் 1961ல் எரித்திரிய விடுதலை முன்னணியின் (E. L. F.) தலைமையின் கீழ், எரித்திரிய மக்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். ஏகாதிபத்தியம் சரிந்து கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், அமைதி வழிகளில் காலனியாதிக்கத்தை உண்மையாகவே நீக்க இயலும் என்பது முடியாத காரியம். இதனை காலனிய, நவகாலனிய நாட்டு மக்களின் சுதந்திரப்போர்கள் போதுமான அளவுக்கு நிரூபித்துள்ளன.

எனினும், இப் போராட்டங்கள் வெற்றி காண, இவை வெகுஜனங்களிடம் வேர் கொள்ள வேண்டும்; சரியான ஒரு அரசியல் கருத்தியல் பார்வையின் வழிகாட்டல் அவசியம். ''புரட்சிகரமான ஒரு கோட்பாடு இல்லாமல், புரட்சிகரமான இயக்கம் எதுவும் இருக்க முடியாது'' என்ற கூற்றினை எரித்திரிய அனுபவம் நிரூபித்துள்ளது. இந்த ஆயுதப் போராட்டம் எரித்திரிய மக்களின் ஆழ்ந்த விருப்பங்களைப் பிரதிபலித்தாலும், அவர்தம் மனப்பூர்வமான ஆதரவைப் பெற்றிருந்தாலும், இவ் வியக்கத் தலைமைக்கு ஒரு சரியான புரட்சிகரப் பார்வை போதிய அளவிற்கு இல்லை. இயக்கத்திற்குள் அநேக உள் முரண்பாடுகள் இருந்தன. இயக்கத்தின் தவறான தலைமையானது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஒரு சந்தர்ப்பவாத பாதையைப் பின்பற்றியது.

இயக்கத் தலைமை, உள்நாட்டில் வெகுஜனங்களுக்கும், சுதந்திரப் போராளிகளுக்கும் எதிராகக் கொலை, கொள்ளை போன்ற பெரும் குற்றங்களை இழைத்தது; சமய, பிராந்திய, தேசிய வேறுபாடுகளை ஊக்குவித்தது. வெளிநாட்டில், முன்னணியின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''பாதை'', அதன் இயக்கத்தைச் சார்ந்த மக்களின் அரசியல் நோக்கங்களுக்கு மாருக இருந்தது. எந்தெந்த அரசாங்கங்கள் ஆதரவு கொடுக்கின்றனவோ, அவையவற்றின் நோக்கங்களுக்கு இசைந்த மாதிரி வண்ணத்தில் எரித்திரியப் போராட்டம் தீட்டிக் காட்டப்பட்டது.

இந்த எதிர்ப்புரட்சிப் பாங்கான பிளவு சக்திகளுக்கு எதிராக இதற்கோர் முடிவு கட்டும் முற்போக்குக் குரல் எழுந்தது. இந்த ஜனநாயக, முற்போக்கு அம்சமானது, சரியானதொரு புரட்சிகரப் பாதையையும், திட்டத்தையும் மேற்கொள்ளும் முயற்சியைச் செய்தது. 1965 முதல் 1970 வரையில் எரித்திரிய விடுதலை முன்னணிக்குள்ளே ஒரு நீண்ட, கசப்பான போராட்டம் நடந்தது. இக் காலகட்டத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அநேக பின்னடைவுகள் ஏற்பட்டன. இந்த உட்போராட்டங்களின் முடிவில், 1970 ஏப்ரலில் 'எரித்திரிய மக்களின் விடுதலைப் படைகள்' என்ற அமைப்பு (E.P.L.F.) உருவாயிற்று.

முதலில் எரித்திரிய விடுதலை முன்னணியின் எதிர்ப் புரட்சிகர மேலிடத்தின் தலைமையை உதறி, அவர்தம் சந்தர்ப்பவாதப் பாதையை எதிர்த்த அனைத்து முற்போக்கு ஜனநாயகப் போராளிகளை 'எரித்திரிய மக்களின் விடுதலைப் படைகள்' (எ.ம.வி.ப.) ஒன்றுபடுத்திற்று. ஒரு ஜனநாயக முன்னணியை உண்டாக்கி, எரித்திரிய புரட்சியின் நோக்கங்களைச் சரிவர விளக்கியது; அதன் குறைந்தபட்ச, உயர்ந்தபட்ச திட்டங்களைத் தெரிவித்தது; புரட்சியின் உள் அக முரண்பாடுகளைத் தீர்க்க ஒரு ஜனநாயக உரையாடலைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. கட்சியின் மாத இதழான 'முன்னணிப் படை' (Vanguard) ஜுலை (1974) இதழில், அந்நிய மேலாதிக்கத்திலிருந்து எரித்திரியாவை மீட்பதும், தேசிய சுதந்திரத்தை அடைவதுமே தேசிய ஜனநாயகப் புரட்சியின் அன்றைய காலகட்ட நோக்கமாகும் என எழுதியது.

எரித்திரியப் போராட்டம் தேசியப் பண்பு கொண்டது; ஏனெனில், காலனியம், ஏகாதிபத்தியம், யூத இனவெறிவாதம் போன்றவற்றிற்கு எதிராக எரித்திரியாவில் நாட்டுப்பற்றுள்ள சகல வர்க்கங்களையும், தேசிய இனங்களையும், அது திரட்டுகிறது; அவர்களுடைய தேசிய உரிமைகளைத் திரும்பப் பெறுவதற்குப் போராடுகிறது. அது ஜனநாயகப் பண்பு கொண்டது. ஏனெனில், அது, உழைக்கும் மக்களின் அடிப்படை நலன்களையும், விருப்பங்களையும் முன்வைக்கிறது; அவர்தம் சமூக விடுதலைக்காக போராடுகிறது. இந்த தேசிய ஜனநாயகப் புரட்சியானது, தொழிலாளர் மற்றும் விவசாயிகளுடன் கூட்டுச் சேர்ந்து, பாட்டாளி வர்க்க கருத்தியலை வழிகாட்டியாகக் கொண்டு, எதிர்கால எரித்திரிய சமூகத்தின் சோஷலிச உருமாற்றத்திற்கான அடித்தளத்தை இட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்கு மாருக, எ. விடுதலை முன்னணியின் சந்தர்ப்பவாத, எதிர்ப்புரட்சிப் பண்புள்ள 'புரட்சிக் கவுன்சில்' என்ற கோஷ்டிக்கு, புரட்சியின் பிரதான முரண்பாடுகளுக்கும், இரண்டாம்பட்ச முரண்பாடுகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் தெரியவில்லை. ஆகவேதான், இவர்களுடைய தவருன முறைகளால் எரித்திரிய மக்கள் விடுதலை படையை அழித்தொழிக்கும் உள்நாட்டுப் போரைத் தொடங்கிற்று. எ.ம.வி. படையை 'எதிர்ப் புரட்சி' என வர்ணித்தது. இந்தப் 'புரட்சி கவுன்சி'லின் தவருன பாதையும், அதன் பிரிவினைவாத அரசியலும் எரித்திரிய போராட்ட அணிகளைப் பிளவுபடுத்தியுள்ளன; நூற்றுக் கணக்கில் வீரப் போராளிகள் பலியாகினர்; பெரும் பொருட்சேதம் விளைந்தது. மக்களிடையே பிளவு, பகை, அந்நியமாதல் ஆகியன ஊட்டப்பட்டன. எதியோப்பிய காலனியாட்சிக்கு மிக அவசியமாகத் தேவைப்பட்ட கால அவகாசம் வழங்கப்பட்டது. இச் சமயத்தில் காலனி ஆக்கிரமிப்புத் துருப்புக்கள் நாட்டுப்புறங்களில் குண்டுவீசித் தாக்கவும், கிராமங்களை அழிக்கவும், ஆயுதமற்ற குடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களை படுகொலை செய்யவும் வழியேற்பட்டது. இந்த உள்நாட்டுப் போர் எரித்திரிய சுதந்திரத்தின் வைரிகளுக்குப் பெரும் நன்மையாக முடிந்தது.

உள்நாட்டுப் போரால் ஏற்பட்ட துயரங்களுக்கிடையிலும் எ. ம. வி. படையால் விடுதலைப் போராட்டத்திற்கு வெகுஜனங்களை திரட்டி, அமைப்பாக்கி, வழிநடத்த முடிந்துள்ளது. தேசிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக, போராளிகள் மற்றும் வெகுஜனங்களின் அரசியல் உணர்வையும், கருத்தியல் மட்டத்தையும் உயர்த்துவதற்கு எ. ம. வி. படை இடைவிடாமல் முயற்சிக்கிறது. தன்னுடைய போராளிகள் மத்தியிலிருந்த கல்வியறிவின்மையைத் துடைத்தெறிந்துள்ளது. எ. வி. முன்னணியின் தவிர்க்கமுடியாத எச்சமாகிய பிற்போக்கு மிகையுணர்வுகளை அகற்றுவதற்காக அரசியலறிவூட்டும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. தேசிய ஒற்றுமை, சுய சார்புள்ள நீண்ட தேசிய விடுதலைப் போர் ஆகியவற்றிற்கான அடித்தள வேலைகளை இட்டுக் கொண்டிருக்கிறது. சுய சார்பு என்றால், எரித்திரிய உழைக்கும் மக்களின் பலத்தையும் மூலாதாரத்தையுமே பிரதானமாகச் சார்ந்திருத்தல் என்பது பொருள். எ.ம.வி. படை, அரசியல் உணர்வுள்ள ஒரு மக்கள் படையைக் கட்டியுள்ளது. அந்நிய மேலாதிக்க வடிவங்களையும், வர்க்க, தேசிய, பால் அடிப்படையிலான எல்லா சமூக அடக்குமுறை வடிவங்களையும் பூரணமாக அகற்றுவதில் ஈடுபட்டுள்ளது.

1974ல் ஹெய்லி செலாசியின் ஆட்சி தூக்கியெறியப்பட்டு புதிய இராணுவ ஆட்சி உருவான பின் பலர் மாற்றம் ஏற்படுமென எதிர்பார்த்தனர். ஆனால் ஹெய்லி செலாசியின் எதேச்சதிகாரத்திலும் சரி, புதிய இராணுவ ஆட்சியின் கீழும் சரி எரித்திரிய, எதியோப்பிய பாட்டாளி மக்கள் எப்போதும் ஒரே வகையான எதிரிகளையே சந்தித்து வந்துள்ளனர். எதியோப்பிய மக்களின் ஜனநாயகப் போராட்டமும், எரித்திரிய மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமும் சேர்ந்து பழைய ஆட்சியை வீழ்த்தின. எதியோப்பிய வெகுஜனங்களின் போராட்டம் அமைப்பெதுவுமின்றி தானுகவே எழுந்தது. இதனுல் எதிர்பார்த்த விளைவு கிடைக்கவில்லை. முன்னைய அடக்குமுறை கருவியான இராணுவத்தில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. தலைமையில் ஆள்மாற்றம் மட்டுமே ஏற்பட்டது. அமெரிக்காவின் இடத்தில் சோவியத் புகுந்து கொண்டது. அதே அமெரிக்க, இஸ்ரேல் பயிற்சி கொடுத்த இராணுவம் சோவியத்தின் வழிகாட்டலினூடு 'சோஷலிச' இராணுவமாக அதே காட்டுமிராண்டி நடவடிக்கைகளை மேற்கொண்டது. அமெரிக்காவிற்குக் கிடைத்த பரிசான எரித்திரிய தலைநகர் அஸ்மருவிலுள்ள கக்னு தொடர்பு நிலையம் போல் ரஷ்யாவிற்கு கிடைத்த பரிசு மஸாவா துறைமுகம் ஆகும்.

பாசிஸம் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வழிகளில், பல்வேறு வடிவங்களில் தோன்றி வெளிக்காட்டலாம். இது அந்தந்த நாட்டின் வரலாற்று, பொருளாதார, அரசியல், சமூக நிலைமைகளையும், உலக சக்திகளின் தொடர்புகளையும், உறவுகளையும் பொருத்ததாகும். புரட்சி, சோஷலிசம் என்பவற்றின் பெயரால் பாசிஸம் தனது கொடும் சர்வாதிகாரத்தை நடத்தலாம்; மக்களை ஏமாற்றலாம். கவர்ச்சிகரமான கோரிக்கைகளுக்கு கபடமாக குரல் கொடுத்து அவர்களை கவர முயலலாம். ஆனுல் எங்கும் எப்போதும் சாராம்சம் ஒன்று தான் - குறுகிய வெறியும், எதிர்ப்புரட்சித் தன்மையும், ஆக்கிரமிப்பும் கொண்டது.

எதியோப்பிய இராணுவ ஆட்சியின் வெற்று முற்போக்குக் கூச்சலும், பிரகடனங்களும் எதியோப்பிய வெகுஜனங்களையும், எரித்திரிய மக்களையும், முற்போக்கு உலகின் அபிப்பிராயத்தையும் ஏமாற்றுவதற்குத் தான். உண்மை நிலைமை என்னவென்ருல் வெகுஜனங்கள் போதுமானளவிற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரட்சிமயமாவதற்குள் இராணுவக் கும்பல் பொது மக்கள் இயக்கத்தை தோற்கடித்து ஒரு பாசிஸ சர்வாதிகாரத்தை நிறுவுவதில் வெற்றி கண்டு விட்டது. சோஷலிசத்திற்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லாத போதும் நாசிஸம் போல் இந்தப் பாசிஸமும் 'எதியோப்பிய சோஷலிசம்' என்று கூறிக் கொள்கிறது. இது குட்டிபூர்ஷ்வா தேசியம் மட்டுமல்ல, குறுகிய கொடிய வெறி வாதமுமாகும். இதற்குப் பின்னணியில் சோவியத் யூனியனே, கியூபாவோ நிற்பதனால் தனது உண்மைச் சொரூபத்தை கபட வார்த்தைகளால் மூடி மறைக்க முடியாது. இன்று சோவியத் ஆலோசகர்களின் வழிகாட்டலில் மோசமான குண்டு வீச்சு எரித்திரிய மக்கள் மீது நடத்தப்படுகின்றது. எரித்திரிய மக்கள் சோவியத் விமானம், டாங்கிகளுக்கோ அன்றி, சோவியத், கியூப ஆலோசகர்களுக்கோ அஞ்சவில்லை. தமது சொந்தப்பலத்தில் தங்கிநின்று நீண்டகாலப் போராட்டத்திற்கு தயாரான நிலையில் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று எரித்திரிய விடுதலை இயக்கங்களான எ.வி.முன்னணியும், எ.ம.வி. படையும் கூட்டாக ஐக்கிய முன்னணி அமைத்துள்ளன. அவை தமது சுயசார்பில் தங்கி நின்று உலக புரட்சிகர இயக்கங்களினதும், தேசிய விடுதலை இயக்கங்களினதும், முற்போக்கு சக்திகளினதும் உறுதுணையோடு தமது போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றன.

[இன்றைய போராட்டத்தின் தன்மை மற்றும் விபரங்கள் முழுமையாக இதில் தருவதற்கு போதிய இடவசதியின்மையால் தரமுடியவில்லை. அடுத்த இதழில் தருகின்றோம்.]

□

## தூசு! தூசு!

ஒரு கோடிக் கவிதைகளால்
உலகம் போற்றும்
பெருங்கவிஞன் என நானே
நாமம் பெற்றால்
ஒரு சொட்டு இரத்தத்தை
உரிமைப் போரில்
தருபவனின் புகழ் முன்னே
தூசு! தூசு!

**கவிஞர் சுபத்திரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏனிந்த அவதூறுகள்?

எமது இயக்கத் தோழர்கள் மாற்று இயக்கத்தினர்களால் கடத்தப்படுவது, மிரட்டப்படுவது, தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள் அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ளன. தெல்லிப் பளைப் பகுதியில் 30-7-85 அன்று தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் எமது தோழர்கள் மூவர் கடத்தப்பட்டார்கள். டாக்டர் ராஜேந்திரா வீட்டில் நடந்த களவு சம்பந்தமாக விசாரணை செய்யக் கைது செய்யப் பட்டதாகக் கூறப்பட்டது. இவர்கள் எமது தோழர்களை அடித்து துன்புறுத்தியதுடன் வற்புறுத்தி பொய்யான வாக்குமூலங்களை எழுதுவித்துள்ளனர். (இதனை எந்த நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கவோ...?) பின்னர் தெல்லிப்பளையில் பொதுமக்கள் நடத்திய போராட்டங்களான உண்ணாவிரதம், ஆர்ப் பாட்ட ஊர்வலம், மறியல் போராட்டம் என் பவற்றின் பின் எமது தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். TELOவின் நோக்கம் கொள்ளையைப் பற்றி விசாரிப்பதாயின் அவர்கள் உரிய வகையில் எம் அமைப்பை அணுகியிருக்க வேண்டும். அதனைவிட்டு சிறீலங்கா இராணுவத்தினர் போல் நடந்து கொண்டது மிக மோசமானதும், கண்டிக்கப் பட வேண்டியதுமாகும். எமது இயக்கத்தின் மீது பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்துவது, சேறு பூசுவது, அவதூறு பரப் புவது என்பன பல இயக்கங்களினுலும் செய் யப்படுகின்றன. இவை தமிழீழத்தில் மட் டுமல்ல, தமிழ்நாட்டிலும், வெளிநாடுகளி லும் கூட செய்யப்படுகின்றன. இது போன்ற பொய்க் குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றுக் கும் நாம் பதில் அளித்துக் கொண்டிருக்க முடியாது. இருப்பினும் அண்மையில் நடந்த டாக்டர் ராஜேந்திரா வீட்டுக் கொள்ளை, துர்க்கை அம்மன் கோயில் கொள்ளை தொடர்பாக எமது தோழர்கள் TELOவினுல் கைது செய்யப்பட்டு விசாரிக் கப்பட்டதனுல் இது பற்றி விளக்கமளிக்க வேண்டியது எமது கடமையாகும்.

நாம் இதனை செய்யவில்லை என்பது டாக்டர் ராஜேந்திராவுக்கே தெரியும். (மத வழிபாட்டு ஸ்தலங்களிலோ அல்லது தனி யார் சொத்துகளையோ கொள்ளையடிப்பதை நாம் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை.) துர்க்கையம்மன் கோயில் கொள்ளை போன்ற குற்றச்சாட்டுகள் வேண்டுமென்றே எம் மீது சுமத்தப்பட்டவை. நாம் இதுபோன்ற பொய்க் குற்றச்சாட்டுகளை மறுப்பதுடன் இச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கின் ரேம். நாம் எப்போதும் இயக்கங்களை அர சியல் ரீதியாகவே விமர்சித்து வந்துள் ளோம். மாற்று இயக்கங்களைப் பற்றி அவ தூறு, பொய்க் குற்றச்சாட்டுகள், வதந்தி பரப்பும் நோக்கம் ஆகியவை எமக்கு கிடை யாது.

*விடுதலை இயக்கங்களே!*

*எம்மை அரசியல் ரீதியாக விமர்சி யுங்கள். எம் தவறுகளை திருத்த நாம் என்றுமே தயங்கியதுமில்லை; மறுத்த துமில்லை. விமர்சனங்கள் எம்மையும் வளர்க்க உதவும். உங்களையும் வளர்க்க உதவும்.*

*பொது எதிரிக்கெதிராக உங்கள் துப்பாக்கிகளைத் திருப்புங்கள் பிளவு கள் எதிரிக்கு மட்டுமே சாதகமானவை. வெற்றியை வென்றெடுக்க ஒன்று படுங்கள்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அராஜகத்திற்கும், பிற்போக்குத் தனத்திற்கும்

எதிராகப் போராடிய விடுதலைப் போராளி

# தோழர் சந்ததியார் கடத்தப்பட்டார்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOT) ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முன்னாள் அரசியல் செயலருமான தோழர் சந்ததியார் (வசந்தன்) கடந்த 18-9-1985 புதனன்று சென்னையில் அராஜகவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார். இவர் தமிழீழ மக்கள்விடுதலைக் கழகத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஒரு வருடத்திற்கு முன் இயக்கத்தை விட்டு வெளியேறி இருந்தார். இவர் தமிழீழப் போராட்டத்தைச் சரியான திசைவழியில் முன்னெடுப்பதற்கு மக்கள் இயக்கத்தைக் கட்டவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இயக்கங்களின் சுத்த இராணுவப் போக்கு, அராஜகம், உட்கட்சி ஜனநாயகமின்மை என்பவற்றிற்கெதிராக போராடியதுடன், இயக்கங்களின் சந்தர்ப்பவாதப் போக்கை நிராகரித்து, சொந்தப் பலத்தில் தங்கிநின்று போராடுவதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தார்.

முன்பு தமிழ் இளைஞர் பேரவையிலிருந்த காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சந்தர்ப்பவாதத்திற்கும், பிற்போக்குத்தனத்திற்கும் எதிராகப் போராடி கூட்டணியினரை தமிழ் மக்களிடையே அம்பலப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் எப்போதும் அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்கும், பிற்போக்கு சக்திகளுக்கும் சவாலாகவே இருந்து வந்தார். எனவே இவரது நடவடிக்கைகளை பொறுக்க மாட்டாத இத் தீய பிற்போக்கு சக்திகளே இக் கடத்தலை திட்டமிட்டு செய்துள்ளன. இது போன்ற காட்டுமிராண்டித்தனத்திற்கும், அராஜகத்திற்கும் எதிராக உண்மையான தேசபக்த சக்திகள் போராடுவது அவசியமானது. ஒரு தனிமனிதனிற்குரிய அடிப்படை ஜனநாயக உரிமையான கருத்துச் சுதந்திரம், வாழும் உரிமை கூட இன்றில்லை என்பது எவ்வளவு கேவலமானதும் வேதனைக்குரியதுமாகும்.

தமிழ் மக்களே!

இது போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்தும் அனுமதிக்கப் போகிறீர்களா? அல்லது கண்டும் காணாமல் இருக்கப் போகிறீர்களா?

இன்று சந்ததியாருக்கு நடந்தது நாளை ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் நடக்கலாம்.

இதனை அனுமதிப்பீர்களாயின் எதிரி தான் நன்மையடைவான். எமது போராட்டம் தோல்வியடைவது மாத்திரமல்ல; எமது போராளிகளின், மக்களின் உயிர்த்தியாகங்கள் யாவும் அர்த்தமற்றவையாகி விடும்.

இவ் அராஜகவாதிகள் மூலம் ஒரு தமிழீழம் கிடைத்தாலும் அது இன்னொரு பங்களாதேஷ் ஆகவோ அல்லது போராடி விடுதலை பெற்று இன்று மோசமான இராணுவ ஆட்சிகளாகவுள்ள ஆபிரிக்க நாடுகள் போலவோ ஒரு இராணுவ ஆட்சியாகவே உருவெடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனை உணர்ந்து இவ் அராஜகத்தை முறியடிக்க போராடுமாறு முற்போக்கு தேசபக்த தமிழ் மக்களை அறைகூவி அழைக்கிறோம்.

அராஜகவாதிகளே உங்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துகின்றோம்!

*மனிதர்கள் தோற்கலாம், மானுடம் தோற்பதில்லை!*

*போராளிகள் அழிக்கப்படலாம், போராட்டம் அழிவதில்லை!*

www.tamilarangam.net

# பூட்டானின் இறைச்சிக்கடை

சுத்திச் சுத்திச்
சுழன்றும் உழன்றும்
தொலைவில்
நூறு துண்டாய்த் தெறித்தும்
மறுபடி
ஒன்று சேர்ந்து
வந்து சேர்ந்தாயிற்று.

'சுப்பற்றை கொல்லை'

வட்டமாய் மேசை,
சதுரமாய்க் கதிரை.
சுற்றியோ
பழைய தோசையாய்ப் புளித்த
உழுத்தந் தலைகள்
ஆட்டலாம் அவற்றை -
உண்ணலாம், குடிக்கலாம்
எவற்றையும்.

விட்டத்தில் தொங்குது
தராசு.

எதனைப் போட்டு நிறுக்கலாம்?

வீதியெங்கும் சிதறிய குருதியை
சாம்பலாய்க் கரியாய்
எஞ்சியிருக்கும் வீடுகளை
கடைசி நிமிடத் துளியில்
சொந்த மண்ணை எட்டவுமின்றித்
தொலைவில்
அவலமாய் எழுந்த குரல்களை
நாய்களால்
குதறப்பட்ட எமது பெண்களை -

மறுபுறம்,
அவர்களின் நிலத்தில்
'எமது வீரத்'தில்
தொலைந்த உயிர்களை.

எங்கோ தொலைவில்
இருந்தபடியே
எமது சரித்திரம்
எழுதுவோம் என்றார்.

கால்களை நீட்டிக்
கைகளைக் குவித்துக்
குப்புறக் கிடப்பதும்
சரித்திரம் ஆனது.

சரணடைக!

சடலங்கள் மீது
சாம்பலைத் தூவியே
சரித்திரம் படைத்து
வயிறுகள் வளர்த்த
வீரபரம்பரை

□□

— சுகுமார் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்